www.padippkam.com

சி.பி.எம். நிலைப்பாடுகளுடன் அப்படியே பின்னிப் பிணைந்து கிடக்கும் த.தே.பொ.க.வை வழி நடத்துவது சி.பி.எம்.-ன் ஏகாதிபத்தியவாதமும் சொந்த தரகு தேசியமும் தானேயன்றி மார்க்சியமல்ல. அது ஏற்றுக்கொண்டிருப்பதும் சி.பி.எம். முன்வைத்த இந்திய வரலாறுதான். அதாவது இந்திய தேசியம் என்னும் பெயரில் தரகு முதலாளிய - பார்ப்பனிய ஏகாதிபத்தியம் வரலாற்றில் வகிக்கும் பாத்திரத்தை மறுப்பதுதான் சி.பி.எம்.-ன் இந்திய வரலாறு; அதுதான் த.தே.பொ.க.வின் இந்திய வரலாறு. இவ்வாறு சி.பி.எம் புரட்டல்வாதிகளுடன் நெருங்கிப் பிணைந்து நின்று மார்க்சியத்திலிருந்தும் மண்ணின் வரலாற்றிலிருந்தும் விலகி நிற்கும் த.தே.பொ.க. மண்ணுக்கேற்ற மார்க்சியம் படைக்கப் போவதாக பிதற்றிக்கொண்டு அலைகிறது.

# த.தே.பொ.க. பொதுவுடைமைக் கட்சியா? தரகு தேசியக் கட்சியா?

கார்முகில்

www.padippkam.com

உலகத் தொழிலாளர்களே, ஒன்று சேருங்கள்!



தநாமர்லெக

படிப்பகம்

www.padippkam.com

# த.தே.பொ.க.
# பொதுவுடைமைக் கட்சியா?
# தரகு தேசியக் கட்சியா?

**கார்முகில்**

தமிழ்நாடு மார்க்சிய-லெனினியக் கட்சி

படிப்பகம்

www.padippkam.com

முதற்பதிப்பு
மே 2005

விலை ரூ. 15

# உள்ளடக்கம்

1. த.தே.பொ.க.வின் தத்துவம்: மார்க்சிய–லெனினியமா? வர்க்க சமரசமா? 7

2. கூட்டுத் தலைமை எனும் பித்தலாட்டம். 11

3. கூட்டாட்சிக் கோரிக்கை: தமிழ் மக்களின் பிரமையா? த.தே.பொ.க.வின் கொள்கையா? எங்கப்பன் குதிருக்குள் இல்லை என்கிறார் பெ.ம. 13

4. த.தே.பொ.க.வின் தேசியக் கொள்கை: பாட்டாளி வர்க்க தேசியக் கொள்கையா? ஏகாதிபத்தியவாத ஒடுக்குமுறைக் கொள்கையா? 19

5. இந்தி தேசிய இனம்: ஒடுக்கும் தேசிய இனமா? தேசிய ஒடுக்குமுறை வாதமா? 23

6. தரகு தேசியம்: “பரிணாம” வளர்ச்சியில் வந்த “துல்லியமான” முடிவு 28

7 ஒடுக்கும் தேசிய இனம் இல்லை என்பது சி.பி.எம். நிலைப்பாடாம்! அனைத்திந்தியப் புரட்சியாம்! பிதற்றுகிறார் பெ.ம. 36

8. த.தே.பொ.க.: சந்தர்ப்பவாத வித்தைகள் காட்டும் சர்க்கஸ் கூடாரம் 43

படிப்பகம்

www.padippkam.com

# 1

## த.தே.பொ.க.வின் தத்துவம்:

## மார்க்சிய-லெனினியமா? வர்க்க சமரசமா?

த.தே.பொ.க.வின் வழிகாட்டும் தத்துவம் எது? "இம்மண்ணிற்கேற்ப வளர்த்தெடுக்கப்படும் மார்க்சிய-லெனினியமே தமிழ்த்தேசப் பொதுவுடைமைக் கட்சியின் வழிகாட்டும் நெறி" என்று அதன் கொள்கை அறிக்கை கூறுகிறது.

பாட்டாளி வர்க்கக் கட்சிகள் மார்க்சிய-லெனினியத்தைத் தமது வழிகாட்டும் தத்துவமாக அறிவிக்கும். ஆனால் த.தே.பொ.க. இம்மண்ணிற்கேற்ப வளர்த்தெடுக்கப்படும் மார்க்சிய-லெனினியம் என்று அறிவித்திருக்கிறது. அது என்ன மண்ணிற்கேற்ப வளர்த்தெடுக்கப்படும் மார்க்சிய-லெனினியம்?

மார்க்சிய-லெனினியம் என்பது மற்ற தத்துவங்களைப் போல் அல்லாது சமுதாயத்தைப் புரிந்துகொள்ளவும் மாற்றியமைக்கவும் வழிகாட்டும் தத்துவமாகும். இது ஏல்லா நாடுகளுக்கும் பொருந்தும். இதில் மண்ணுக்கேற்ற மார்க்சியம் என்று எதுவும் இல்லை. எல்லா மண்ணுக்கும் மார்க்சியம் ஒன்றுதான். மண்ணுக்கு ஒரு வண்ணம் என மார்க்சியம் நிறம் மாறுவதில்லை. மண்ணுக்கு ஏற்ற மார்க்சியம் என்பது மார்க்சியவாதிகள் போல் காட்டிக்கொள்ளும் சந்தர்ப்பவாதிகளின் உத்தியாகும்.

இந்த உத்தியையே த.தே.பொ.க.வும் கையாள்கிறது. அதன் தலைவர் பெ.ம. "மார்க்சியம்-லெனினியம் சர்வதேச அளவில்

படிப்பகம்

www.padippkam.com



முழுவளர்ச்சி பெற்ற தத்துவம்" என்றும்,"சமூகப் புரட்சிக்கு, சமதர்மத்துக்கு, எல்லாவகை ஒடுக்குமுறைகளிலிருந்தும் விடுதலை பெறுவதற்கு வழிகாட்டும் நெறி" என்றும்,"தேசிய விடுதலைப் புரட்சியிலோ, சமூக அமைப்பு மாற்றத்திற்கான புரட்சியிலோ ஈடுபட்டிருப்பவர்களுக்கு மார்க்சியமே தத்துவப்பேராயுதமாக விளங்குகிறது" என்றும் (தமிழ் தேசியம் இனி - பக். 106-7) முழங்குகிறார். ஆனால் இவை எல்லாம் தன்னை ஒரு மார்க்சியவாதி போலவும், தனது கட்சி மார்க்சிய-லெனினியத்தை வழிகாட்டும் தத்துவமாக ஏற்றுக்கொண்ட கட்சி என்பது போலவும் காட்டிக்கொள்ள முயலும் ஒரு சந்தர்ப்பவாதியின் வாய்ச்சவடால் மட்டுமே!

காரணம் மண்ணுக்கேற்ற மார்க்சியத்திற்கு அவர் விளக்கம் அளிக்கும்போது தனது உண்மை நிலையை உடைத்துக் காட்டி விடுகிறார். "தமிழ் நாட்டில் நிலவும் தனித்துவமான வர்ண-சாதி ஆதிக்கத்தை வீழ்த்துவதற்கான வழிகாட்டுதல்கள் மார்க்சிய-லெனினியத்தில் இல்லை" என்கிறார்; "வர்ண-சாதி ஆதிக்கத்தை வீழ்த்த வழிகாட்டும் பெரியாரியல்-அம்பேத்காரியல் சிந்தனைகளை இணைத்த மண்ணுக்கேற்ற மார்க்சியம் தமிழ்த்தேசியப் புரட்சிக்கான வழிகாட்டும் நெறியாக இருக்கும்" என்கிறார்; "மரபு வழிப்பட்ட முற்போக்கு சிந்தனைகள், மார்க்சியம், பெரியாரியம், அம்பேத்காரியம் போன்றவற்றை இணைத்துக் கொண்ட கூட்டுத்தத்துவப் பார்வையே தமிழ்த் தேசியப் புரட்சிக்கு வழிகாட்ட வேண்டும்" என்கிறார். "தமிழ்த் தேசியப் புரட்சிக்கு ஒரு குறிப்பிட்ட தத்துவம் மட்டுமே வழிகாட்டும் தத்துவமாக இருக்க முடியாது" என்கிறார். (தமிழர் கண்ணோட்டம், சனவரி - 2005).

"மார்க்சியம்-லெனினியம் சர்வதேச அளவில் முழு வளர்ச்சி பெற்ற தத்துவம்", "எல்லா ஒடுக்குமுறைகளிலிருந்தும் விடுபடுவதற்கு வழிகாட்டும் தத்துவம்", "புரட்சியாளர்களின் பேராயுதம்" என்றெல்லாம் வாய்வீச்சடிக்கும் பெ.ம. வர்ண-சாதி ஆதிக்கத்தை வீழ்த்துவதற்கான வழிகாட்டுதல்கள் மார்க்சிய-லெனினியத்தில் இல்லை என்கிறார்; மண்ணுக்கேற்ற மார்க்சியம் வளர்த்தெடுக்கப்பட வேண்டும் என்கிறார்; கூட்டுத்தத்துவப் பார்வையே தமிழ்த் தேசியப் புரட்சிக்கு



வழிகாட்ட வேண்டும் என்கிறார். அதாவது மார்க்சிய-லெனினியத்திற்குப் பதில் கூட்டுத்தத்துவப் பார்வை. இதுதான் த.தே.பொ.க.வின் தத்துவப் பார்வை; மண்ணுக்கேற்ற மார்க்சியம்.

அது என்ன கூட்டுத்தத்துவப் பார்வை? மார்க்சியம்-லெனினியம் என்பது ஒரு வர்க்கப்போராட்டத் தத்துவம். ஏடறிந்த மனிதகுல வரலாறெல்லாம் வர்க்கப் போராட்டங்களின் வரலாறென்பதும், புரட்சி என்பது ஒரு வர்க்கம் மற்றொரு வர்க்கத்தைத் தூக்கி எறியும் பலாத்கார நடவடிக்கை என்பதும் அது மனிதகுல வரலாறு குறித்தும்,சமுதாய மாற்றம் குறித்தும் முன்வைக்கும் கோட்பாடுகள்.

இந்தக் கோட்பாடுகளின் அடிப்படையிலேயே பாட்டாளி வர்க்கக் கட்சிகள் தமது செயல் திட்டங்களை வகுத்துக் கொள்கின்றன. சமூக மாற்றம் குறித்த இந்த அடிப்படையான கோட்பாடுகளை ஏற்றுக் கொள்ளாத கட்சிகளை மார்க்சிய-லெனினியக் கட்சிகள் என்று கூறமுடியாது. இதில் த.தே.பொ.க.வின் நிலை என்ன?

வர்க்கப் போராட்டக் கோட்பாடுகளை த.தே.பொ.க. வெளிப்படையாக எதிர்ப்பதில்லை. ஆனால் வர்ண-சாதி ஆதிக்கத்தை வீழ்த்துவதற்கான வழிகாட்டுதல்கள் மார்க்சிய-லெனினியத்தில் இல்லை என்று கூறுவதன் மூலம் தமிழகத்திற்கு-இந்தியாவிற்கு மார்க்சிய-லெனினியம் முன் வைக்கும் வர்க்கப் போராட்டக் கோட்பாடுகள் பொருந்தாது என்பதுதான் அதன் நிலை.

இவ்வாறு கூறுவது புதிய செய்தி அல்ல. பெரியாரும், அம்பேத்காரும் இந்த நிலைப்பாடு கொண்டவர்கள்தாம். மார்க்சிய-லெனினியம் முன்வைக்கும் வர்க்கப் போராட்டக் கோட்பாடுகள் மேற்கத்திய நாடுகளுக்குப் பொருந்தி வரலாம்; வர்ண-சாதி ஆதிக்கம் நிலவும் இந்தியாவுக்கு பொருந்தாது என்பதுதான் பெரியார், அம்பேத்கார் மேற்கொண்ட நிலைப்பாடு. இதில் வேறுபாடு என்னவெனில் பெரியாரும், அம்பேத்காரும் தமது நிலைப்பாடுகளில் வெளிப்படையாக, நேர்மையாக இருந்தார்கள். அவர்கள் ஒருபோதும் தங்களை மார்க்சிய-லெனினிய வாதிகளாக அதை ஏற்றுக்

படிப்பகம்

www.padippkam.com



கொண்டவர்களாக கூறிக் கொண்டதில்லை. இந்த நேர்மை த.தே.பொ.க.விற்கு இல்லை, என்பதுதான் வேறுபாடு. மார்க்சியவாதிகள் போல் வேடம்போடும் சந்தர்ப்ப வாதிகளிடம் இந்த நேர்மையினை எதிர்பார்க்க முடியாது.

பெரியாரும், அம்பேத்காரும் வர்ண-சாதி ஆதிக்கத்துக்கு எதிராகப் போராடினார்கள். ஆனால் அவர்கள் மார்க்சிய-லெனினியம் முன்வைக்கும் வர்க்கப் போராட்டக் கோட்பாடுகளை ஏற்றுக் கொள்ளாதவர்கள் என்பதால் அவர்களுடைய போராட்டங்கள் அனைத்தும் சீர்திருத்த வாதம் என்ற எல்லைக்கு மேல் செல்வதாகவோ, வர்ண-சாதி ஆதிக்கத்தை ஒழிக்கும் ஆற்றலைப் பெற்றதாகவோ இல்லை.

ஆனால் வர்க்கப் போராட்டக் கோட்பாட்டை வெளிப் படையாக நிராகரித்த பெரியாரியல் - அம்பேத்காரியல் சிந்தனைகள்தான் வர்ண-சாதி ஒழிப்புக்கான சிந்தனைகள் என்கிறது த.தே.பொ.க. இந்த சிந்தனைகளை உள்வாங்கிக் கொண்ட மார்க்சிய-லெனினியம்தான் மண்ணுக்கேற்ற மார்க்சியம் என்கிறது. அதாவது வர்க்கப்போராட்டக் கோட்பாடு நீக்கப்பட்ட மார்க்சிய-லெனினியம்தான் மண்ணுக்கேற்ற மார்க்சிய-லெனினியம் என்பது த.தே.பொ.க. வின் நிலை.

த.தே.பொ.க. முன்வைக்கும் கூட்டுத் தத்துவப் பார்வை என்பது இதுதான். வர்க்கப் போராட்டக் கோட்பாடு நீக்கப்பட்ட மார்க்சிய-லெனினியத்துடன், வர்க்கப் போராட்டக் கோட்பாடுகளை நிராகரித்த பெரியாரியம், அம்பேத்காரியம் போன்றவற்றை இணைத்துக் கொண்டால் கிடைக்கும் பார்வைதான் த.தே.பொ.க.வின் தத்துவப் பார்வை. இதற்கு கூட்டுத் தத்துவப் பார்வை என பெயர் வைத்திருக் கிறார் பெ.ம. ஆனால் அது வர்க்கப் போராட்டக் கோட்பாடுகள் நீக்கப்பட்ட வர்க்க சமரசம் எனும் ஒற்றைத் தத்துவப் பார்வை என்பதே உண்மை.

வர்க்க சமரச தத்துவப் பார்வை என்பது மார்க்சிய-லெனினியமோ, பாட்டாளி வர்க்கப் பார்வையோ அல்ல. அது முற்ற முழுக்க பாட்டாளி வர்க்கத்துக்கு எதிரான



சந்தர்ப்பவாதப் பார்வையே. தனது சந்தர்ப்பவாதத் தத்துவ நிலையை மறைப்பதற்காகத்தான் மண்ணுக்கேற்ற மார்க்சியம், கூட்டுத் தத்துவப் பார்வை என்றெல்லாம் இந்த சந்தர்ப்பவாதி பிதற்றி வருகிறார்.

# 2

## கூட்டுத் தலைமை எனும் பித்தலாட்டம்

த.தே.பொ.க.விடம் கட்சித்திட்டம் என்று எதுவும் இல்லை. அதனிடம் இருப்பதெல்லாம் கொள்கை அறிக்கை என்ற ஒன்றுதான். 1992இல் நிறைவேற்றப்பட்டு 1999இல் இரண்டாவது முறையாக அச்சேறி இருக்கிறது. அதில் புரட்சியின் தலைமை குறித்து எதுவும் இல்லை.

ஆனால் "மக்கள் ஜனநாயக கடமைகளை உட்சாரமாகக் கொண்ட தேசிய இன விடுதலைப் புரட்சிக்கு - தன்னுரிமைப் புரட்சிக்கு தமிழ்ப் பாட்டாளி வர்க்கம் முன்னுரிமை கொடுக்க வேண்டும்" என்றும், "தமிழ்த்தேசியம் என்ற சிந்தனையைப் பாட்டாளி வர்க்க நோக்கில் பார்க்க வேண்டும், செயல்படுத்த வேண்டும்" என்றும் பெ.ம. தமிழ்த் தேசியம் புதிய கேள்விகள் என்ற தனது நூலில் எழுதியிருக்கிறார்.

இதை வைத்து த.தே.பொ.க. பாட்டாளி வர்க்கத் தலைமையினை ஏற்றுக் கொண்ட கட்சி என்று யாரும் தவறாகக் கருதிவிடக் கூடாது. த.தே.பொ.க.வின் உண்மையான நிலை என்ன என்பதை சனவரி 2005 தமிழர் கண்ணோட்டத்தில் எழுதிய கட்டுரை ஒன்றில் பெ.ம. வெளிப்படுத்தி யிருக்கிறார். அதில் தமிழ்த் தேசியப் புரட்சிக்குப் பாட்டாளி வர்க்கம் தலைமை தாங்க வேண்டிய அவசியமோ, சாத்தியமோ இல்லை என்பதற்கான காரணங்களைக் கூறியிருக்கிறார்.

படிப்பகம்

www.padippkam.com



இது சோசலிசப் புரட்சிக்கான காலகட்டமல்ல, தேசிய விடுதலைப் புரட்சி நடக்கவேண்டிய காலகட்டமே நிலவுகிறது என்பதால் பாட்டாளி வர்க்கத் தலைமை அவசியம் இல்லை என்கிறார்.

தொழிலாளி வர்க்கத் தலைமையை ஏற்றுக் கொண்டு இதர உழைக்கும் மக்களும் உழவர்களும் அணிசேரும் சமூக முதிர்வு இன்று இல்லை என்பதால் அது தலைமையளிக்கும் சாத்தியம் இல்லை என்று கண்டுபிடித்திருக்கிறார்!

இதில் வேடிக்கை என்னவென்றால் எந்தக் காரணத்தைக் கூறி பாட்டாளி வர்க்கம் தலைமையளிக்க வேண்டும் என்று முன்பு கூறினாரோ, அதே காரணத்தைக் கூறி பாட்டாளி வர்க்கம் தலைமையளிக்க வேண்டிய அவசியம் இல்லை என்றும் அவர் வாதாடுவதுதான்.

மக்கள் ஜனநாயகக் கடமைகளை உட்சாரமாகக் கொண்டது என்பதால் தன்னுரிமைப் புரட்சிக்கு பாட்டாளி வர்க்கம் முன்னுரிமை தரவேண்டும் என்று (தமிழ்த்தேசியம் புதிய கேள்விகளில்) எழுதிய பெ.ம., மக்கள் ஜனநாயகக் கடமைகளைத்தான் எதிர்கொண்டிருப்பதால் பாட்டாளி வர்க்கம் தலைமையளிக்க வேண்டியதில்லை என்று (சனவரி 2005 தமிழர் கண்ணோட்டத்தில்) எழுதுகிறார்.

பாட்டாளி வர்க்கத் தலைமையிலான புரட்சிதான் மக்கள் ஜனநாயகக் கடமைகளை நிறைவேற்றும் என்பது மார்க்சியத்தின் அரிச்சுவடி தெரிந்தவன் கூட அறிந்திருக்கக் கூடிய செய்தி. இந்த அரிச்சுவடி கூட தெரியாமல் பாட்டாளி வர்க்கத் தலைமையின்றியே மக்கள் ஜனநாயகக் கடமைகளை நிறைவேற்ற முடியும் என்பது போல மாய்மாலம் காட்டுகிறார் பெ.ம.

சந்தர்ப்பவாதிகள் முன்னுக்குப் பின் முரணாக எழுதுவதில் வியப்பதற்கு எதுவும் இல்லை. எப்படியோ பாட்டாளி வர்க்கத் தலைமை இல்லை என்பதைத் தெளிவுபடுத்திவிட்ட பெ.ம. அதற்குப் பதிலாக கூட்டுத் தலைமை என்கிறார்.

அவர் கூறுகிறார்: "தமிழ்த் தேசியப் புரட்சிக்கு தலைமை என்பது ஒற்றைத் தன்மை கொண்டது அல்ல. தொழிலாளர்கள், தலித்துகள், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், இதர வகுப்பினர், உழவர்கள், தமிழ்த் தேசியத்தின் உடைமை வர்க்கத்தினர் எனவுள்ள தமிழ்த் தேசிய சக்திகளின் கூட்டுத் தலைமை கொண்டதாகும்" (சனவரி 2005 தமிழர் கண்ணோட்டம்).



பாட்டாளி வர்க்கத் தலைமை என்பது பாட்டாளி வர்க்கத்திற்கு வழிகாட்டும் மார்க்சிய-லெனினிய தத்துவத்தைக் குறிக்கிறது (த.தே. புதிய கேள்விகள் பக். 23) என்று எழுதியிருக்கும் பெ.ம. இந்தக் கூட்டுத் தலைமை என்பது அவர் முன்னர் கூறிய கூட்டுத் தத்துவத் தலைமைதான் என்பதை மறுக்க முடியாது.

கூட்டுத் தத்துவம் என்பது வர்க்க சமரசத் தத்துவமே என்பதால் கூட்டுத் தலைமை என்பது வர்க்க சமரசத் தலைமையே! அதாவது எதிர்ப்புரட்சிகர முதலாளியத் தலைமையே என்பது சொல்லாமலே விளங்குவதாகும். எனினும் கூட்டுத் தலைமை என்று பித்தலாட்டம் செய்கிறார் பெ.ம.

## 3

## கூட்டாட்சிக் கோரிக்கை: தமிழ் மக்களின் பிரமையா? த.தே.பொ.க.வின் கொள்கையா? எங்கப்பன் குதிருக்குள் இல்லை என்கிறார் பெ.ம.

1990 பிப். 25இல் சென்னையில் த.தே.பொ.க. நடத்திய தமிழ்த்தேசிய தன்னுரிமை மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் முதல் தீர்மானம், "இறையாண்மை பெற்ற தேசிய இனக் குடியரசுகளின் ஒன்றியமாக இந்தியாவை பிரகடனம் செய்ய வேண்டும்" என்று கூறுகிறது.

இரண்டாவது தீர்மானம், "இறையாண்மை கொண்ட தேசிய இனக் குடியரசுகளின் ஒன்றியமாக இந்தியாவைத் திருத்தி அமைப்பதற்கு உடனடி வாய்ப்பு இல்லை என்றால் இந்திய

படிப்பகம்

www.padippkam.com



ஒன்றியத்துக்குள் செயல்படும் இறையாண்மை கொண்ட - தன்னுரிமை பெற்ற தமிழ்த் தேசியக் குடியரசு உடனடியாக அமைக்கப்பட வேண்டும்" என்று கூறுகிறது.

இந்திய ஒன்றியத்தை முழுமையான கூட்டாட்சியாக மாற்றுக என்பதுதான் முதல் தீர்மானத்தின் தலைப்பு. தன்னுரிமை பெற்ற தமிழ்த்தேசக் குடியரசு என்பது இரண்டாவது தீர்மானத்தின் தலைப்பு.

எவ்வாறாயினும் இந்திய ஒன்றியத்துக்குள் தமிழ்த் தேசக் குடியரசு என்பதுதான் தீர்மானங்கள் முன்வைக்கும் கோரிக்கை. இதில் அனைத்து தேசிய இனங்களும் சுயநிர்ணய உரிமை பெற்றிருக்க வேண்டும் என்பது அதிகபட்சக் கோரிக்கையாகவும் தமிழ்த் தேசக் குடியரசு மட்டுமாவது சுயநிர்ணய உரிமை பெற்றிருக்க வேண்டும் என்பது குறைந்தபட்சக் கோரிக்கையாகவும் முன்வைக்கப்படுகிறது.

இதே மாதத்தில் 'இந்தியாவில் தேசிய இனங்கள்' என்ற தலைப்பில் பெ.ம. எழுதிய நூல் ஒன்று வெளி வந்திருக்கிறது. இந்த நூலிலும் இந்தியாவின் தேசிய இனப் பிரச்சினை களுக்கான தீர்வாக மேற்கண்ட இரண்டு கோரிக்கைகளே முன்வைக்கப்பட்டிருக்கின்றன.

தமிழ்த் தேசத்துக்குத் தன்னுரிமை என்ற பெயரில் த.தே.பொ.க. மேற்கண்ட கோரிக்கைகளைத்தான் முன் வைக்கிறது என்பதை எடுத்துக்காட்டி, அது சட்டவாதமும் சந்தர்ப்பவாதமும் ஆகும் என புரட்சிக்கனல் விமர்சித்தது. இதற்கு மறுப்புத் தெரிவிக்க வந்த பெ.ம. கூட்டாட்சி இந்தியாதான் தனது இலக்கு என்பதை மீண்டும் உறுதிப்படுத்துகிறார். அவர் எழுதுகிறார்:

"த.தே.பொ.க. பிரிந்துபோகும் உரிமையுடன்' கூடிய தன்னுரிமை பெற்ற இறையாண்மையுள்ள தேசங்களின் கூட்டமைப்பாக இந்தியாவை மாற்ற வேண்டும் என்கிறது".

"இந்திய அரசு தமிழ்த் தேசத்தின் மேற்கண்ட அரசியல் கோரிக்கையை ஏற்காமல் மேலும் ஒடுக்கும் நிலை தொடர்ந்தால் அது தனிநாடாகப் போகும்".

(த.தே.புதிய கேள்விகள்)



இதில் கூட்டாட்சிதான் தனது இலக்கு என்பதை, உறுதிப்படுத்தும் அதே வேளையில் இந்தக் கோரிக்கையை தில்லி அரசு ஏற்றுக்கொள்ளாமல் போய்விடுமோ என்ற சந்தேகத்தையும் தெரிவிக்கிறார். ஆனால் இது வெறும் சந்தேகம்தான். அதனால்தான் "கோரிக்கையை ஏற்காமல் மேலும் ஒடுக்குமுறை தொடர்ந்தால்" என்று சந்தேகமாக எழுதுகிறார்; "கோரிக்கையை ஏற்காது, மேலும் ஒடுக்குமுறை தொடரும்" என்று உறுதிப்பட எழுதவில்லை.

த.தே.பொ.க. முன்வைக்கும் கூட்டாட்சிக் கோரிக்கையை இந்திய அரசு ஏற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு இருக்கிறது என்பதுதான் த.தே.பொ.க.வின் நிலை. அதனால்தான் இந்தியாவில் தேசிய இனங்கள் என்ற தனது நூலிலும், தன்னுரிமை மாநாட்டுத் தீர்மானத்திலும் இந்தியாவில் தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வாக பெ.ம. இந்தக் கோரிக்கை களை இடம் பெறச் செய்தார்.

"தனிநாடாகவும் அமையலாம், கூட்டாட்சியாகவும் அமையலாம் இந்த இரண்டின் சாத்தியக் கூறுகளையும் உள்ளடக்கிய ஒரு முழக்கம் இருக்கும்போது தனிநாடு என்கிற முழக்கத்தை ஏன் வைக்க வேண்டும்" என த.தே.பொ.க.வின் மற்றொரு தலைவர் இரா.சோ. (தமிழகம் பக். 13) கேட்கிறார். இந்தக் கேள்வியிலும் கூட்டாட்சிக்கான சாத்தியப்பாட்டில் த.தே.பொ.க.விற்கு உள்ள நம்பிக்கை உறுதிப்படுத்தப்படுகிறது.

ஆனால் இதற்கு மாறாக பெ.ம. எழுதுகிறார். "தில்லி ஆட்சியாளர்கள் தன்னுரிமை வழங்குவார்கள் என்ற பிரமை இருக்கிறதா என்று கேட்கிறார்கள்.. த.தே.பொ.க.விற்கு பிரமை இல்லை. தமிழர்களுக்கு இன்னும் பிரமை இருக்கிறதே. இந்தச் சூழ்நிலையில் தன்னுரிமையில் உள்ள குறைந்தபட்சக் கோரிக்கையை - புதிய ஒப்பந்தம் செய்து கொண்டு புதிய இந்தியக் கூட்டமைப்பை உருவாக்குவது என்ற குறைந்தபட்சக் கோரிக்கையை த.தே.பொ.க முன்வைக்கிறது.

குறைந்தபட்சக் கோரிக்கை மறுக்கப்பட்டு ஒடுக்குமுறை தீவிரப்பட்டால் அதிகபட்சக் கோரிக்கைக்கு அதாவது தனிநாட்டிற்கு தமிழர்கள் அணியமாவார்கள்."

(மேற்படி நூல்)

படிப்பகம்

www.padippkam.com



இதில் த.தே.பொ.க.விற்கு கூட்டாட்சி பிரமை இல்லை என்றும், தமிழ் மக்களுக்குத்தான் இருக்கிறது என்றும் புளுகுகிறார். த.தே.பொ.க.விற்கு பிரமை இல்லை என்பதை எங்கப்பன் குதிருக்குள் இல்லை என்பது போல் மறுக்கிறார். "குறைந்தபட்சக் கோரிக்கை மறுக்கப்பட்டு ஒடுக்குமுறை தீவிரப்பட்டால்" என்று அவர் எழுதுவதில் கூட்டாட்சியில் அவருக்குள்ள பிரமைதான் வெளிப்படுகிறதே தவிர தமிழ் மக்களுக்குள்ள பிரமை அல்ல. உண்மையிலேயே கூட்டாட்சியில் அவருக்கு பிரமை இல்லை என்றால் குறைந்தபட்ச கோரிக்கை மறுக்கப்படும், ஒடுக்குமுறை தீவிரப்படும் என்றுதான் எழுதியிருக்க வேண்டும்.

அதுமட்டுமல்ல, ஆட்சியாளர்கள் மேல் மக்களுக்கு தவறான நம்பிக்கை (பிரமை) இருக்கிறது என்று த.தே.பொ.க. கருதுமானால் அது தவறான நம்பிக்கை என்று மக்களிடம் பிரச்சாரம் செய்ய வேண்டும். அதற்கு மாறாக மக்களின் தவறான நம்பிக்கையையே தனது கட்சியின் குறைந்தபட்சக் கோரிக்கையாக்கிக் கொள்ள முடியாது. ஆனால் த.தே.பொ.க. என்ன செய்கிறது? கூட்டாட்சிக் கோரிக்கை 'மக்களின் பிரமை' என்று ஒருபுறம் கூறிக்கொண்டே மறுபுறம் அதையே தனது கோரிக்கையாக - இலக்காக முன்வைத்து மாநாட்டில் தீர்மானங்கள் நிறைவேற்றுகிறது.

அதுமட்டுமல்ல, 'தன்னுரிமை நிலவும் இரண்டு வடிவங்களே கூட்டாட்சியும், தனிநாடும்' என்று அவருடைய தோழர் இரா.சோ. விளக்கமளித்துக் கொண்டிருக்கும் போதே அதற்குள் குறைந்தபட்சக் கோரிக்கை, அதிகபட்சக் கோரிக்கை எனப் பிரித்து பித்தலாட்டம் செய்கிறார் பெ.ம.

குறைந்தபட்சக் கோரிக்கை நிறைவேறினால்தான், அதிக பட்சக் கோரிக்கை நோக்கி முன்னேற முடியும் என்பது பள்ளிப்பிள்ளையும் அறிந்த செய்தி. ஆனால் குறைந்தபட்சக் கோரிக்கை நிறைவேறாவிட்டால் அதிகபட்சக் கோரிக்கை நோக்கி முன்னேறுவது பற்றி பிதற்றுகிறார். குறைந்தபட்சக் கோரிக்கையே நிறைவேறாத போது அதிகபட்சக் கோரிக்கை நோக்கி இவர் எப்படி முன்னேறுவார்? குறைந்தபட்சக் கோரிக்கை நிறைவேறிவிட்டால் அதிகபட்சக் கோரிக்கையின்



கதி என்ன? இப்படி எல்லாம் யாரும் கேட்கமாட்டார்கள் என்ற தைரியம் அவருக்கு.

எப்படியோ தன்னுரிமை என்ற பெயரில் கூட்டாட்சி கோரிக்கையை முன்வைப்பது சட்டவாதமும், சந்தர்ப்ப வாதமும் ஆகும் என்ற விமர்சனத்தை மறுக்க வந்த பெ.ம. தான் முன்வைக்கும் கோரிக்கை - கூட்டாட்சிக் கோரிக்கையல்ல தனது இலக்கு தனிநாடுதான் என்பது போல காட்டும் முயற்சியில் அவர் கூட்டாட்சியில் நம்பிக்கை கொண்ட சட்டவாதியே, சந்தர்ப்பவாதியே என்பதைத்தான் மீண்டும் நிரூபித்துக் கொண்டிருக்கிறார். அதுமட்டுமல்ல, ஒரு பித்தலாட்டக்காரர் என்பதையும் நிரூபித்து விட்டிருக்கிறார் என்பது மற்றும் ஒரு சிறப்பு.

எனினும் சமீப காலங்களாக - மூன்றாண்டுகளாக 'தமிழ்த் தேசக் குடியரசு' என்ற முழக்கத்தை த.தே.பொ.க. முன்வைத்து வருகிறது. இம்முழக்கத்துடன் தமிழ்த்தேசிய முன்னணி என்ற அமைப்பையும் நிறுவியிருக்கிறது.

1990-தன்னுரிமை மாநாட்டுத் தீர்மானத்தில் தமிழ்த் தேசியக் குடியரசு என்ற முழக்கம் இருந்தது. ஆனால் அது பிரிந்து போகும் உரிமையுடன் இந்தியக் கூட்டாட்சியில் அங்கம் வகிக்கும் தமிழ்த் தேசக் குடியரசு என வெளிப் படையாக இருந்தது.

ஆனால் சமீப காலங்களில் முன்வைக்கப்பட்டு வரும் தமிழ்தேசக் குடியரசு என்ற முழக்கம் இந்தியக் கூட்டாட்சியின் அங்கமாக பிரிந்துபோகும் உரிமையுடன் இருக்கும் தமிழ்த்தேசக் குடியரசு என வெளிப்படையாக இல்லை.

"மற்ற தேசிய இனங்களுடன் இணைந்திருப்பது உள்ளிட்ட அனைத்துச் சிக்கல்களையும் தமிழ்த்தேசக் குடியரசு சுயநிர்ணய உரிமை அடிப்படையில் முடிவு செய்யும்" என்று த.தே.மு.வின் கொள்கை அறிக்கை கூறுகிறது.

மேலோட்டமாகப் பார்த்தால் இது 1990இல் முன்வைக்கப்பட்ட தமிழ்த்தேசக் குடியரசிலிருந்து வேறுபட்டது போல் - தனிநாடாயிருக்கும் தமிழ்த்தேசக்

www.padippkam.com



குடியரசு போலத் தோற்றமளிக்கும். அது வெறும் தோற்றம்தான். உண்மையில் இந்தத் தீர்மானம் கூறுவது என்ன? இந்திய ஒன்றியத்திலிருந்து பிரிந்து தனிநாடாக இருக்கும் தமிழ்த்தேசக் குடியரசு, கூடவே மீண்டும் இந்திய ஒன்றியத்துடன் சுயநிர்ணய உரிமை அடிப்படையில் இணைந்து இருப்பது பற்றியும் பேசுகிறது. "பிறதேசிய இனங்களுடன் இணைந்து இருப்பது" என்று தீர்மானம் கூறுவது உண்மையில் எந்த இந்திய ஒன்றிய அமைப்பிலிருந்து பிரிந்ததோ, அதே இந்திய ஒன்றிய அமைப்பில் இணைந் திருப்பது என்பதைத்தான். இந்திய ஒன்றியத்தில் இணையாத தேசிய இனங்கள் இருப்பது போலவும், அவற்றுடன் இணைவது பற்றி முடிவெடுக்கப் போவது போலவும் த.தே.மு. தீர்மானக்காரர்கள் பாவலா காட்டுகிறார்கள்.

தனிநாடாகப் பிரிந்தபின் இந்திய ஒன்றியத்தில் சுயநிர்ணய உரிமை அடிப்படையில் இணைந்துகொள்ள முடியும் எனின், பிரியாமலேயே சுயநிர்ணய உரிமை அடிப்படையில் இந்திய ஒன்றியத்தில் இணைந்திருப்பதற்கு எது தடை? எனவே தமிழ்த்தேசக் குடியரசு என்று இப்போது த.தே.பொ.க. முன்வைத்துவரும் முழக்கம் முந்தைய முழக்கங்களிலிருந்து வேறுபட்டதல்ல; இந்திய ஒன்றியத்தில் பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய சுயநிர்ணய உரிமை பெற்ற தமிழ்த் தேசக் குடியரசு என்பதன்றி வேறல்ல. த.தே.பொ.க. தற்போது முன்வைத்து வரும் தமிழ்த்தேசக் குடியரசு என்ற முழக்கம் தனிநாட்டுக் கோரிக்கைதான் என்றோ, கூட்டரசின் அங்கமாக உள்ள குடியரசு கோரிக்கை அல்ல என்றோ, எங்குமே கூறவில்லை என்பதையும், அதில் ஒரு சந்தர்ப்பவாத மௌனம் சாதிப்பதையும் கவனிக்க வேண்டும்.

இந்திய ஒன்றியத்தில் சுயநிர்ணய உரிமையுள்ள தமிழ்த்தேசக் குடியரசு என்பதில் உறுதியாக, தெளிவாக உள்ள த.தே.பொ.க. அது தனிநாட்டுக் கோரிக்கையோ என ஐயுறும்படி முன்வைப்பது ஏன்? இது பாம்புக்குத் தலையையும் மீனுக்கு வாலும் காட்டும் சந்தர்ப்பவாதிகளின் உத்தி. குறைந்தபட்சக் கோரிக்கை கூட்டரசு, அதிகபட்சக் கோரிக்கை தனிநாடு என்று பெ.ம. பித்தலாட்டம் செய்ய வில்லையா? அதுபோல இது ஒரு பித்தலாட்டம். அவ்வளவுதான்.



# 4

## த.தே.பொ.க.வின் தேசியக் கொள்கை: பாட்டாளி வர்க்க தேசியக் கொள்கையா? ஏகாதிபத்தியவாத ஒடுக்குமுறைக் கொள்கையா?

"தமிழ்த் தேசியத் தன்னுரிமை" என்கிற த.தே.பொ.க.வின் கொள்கை "மார்க்சிய-லெனினிய வழிகாட்டு நெறியில் வந்தடைந்த கருதுகோள்" என்கிறார் பெ.ம.

இந்த முடிவை வந்தடைவதற்கு மார்க்சிய-லெனினியத்திலிருந்து பெ.ம. பெற்றுக்கொண்ட வழிகாட்டும் நெறிகள் எவை? இந்தியாவில் தேசிய இனங்கள் என்ற பெயரில் பெ.ம. எழுதிய நூல் ஒன்று 1990 பிப்ரவரியில் வெளிவந் திருக்கிறது. இந்தியாவின் தனித்தன்மையை அடையாளம் காண மார்க்சிய-லெனினிய வழியில் மேற்கொள்ளப்பட்ட பரிசீலனையின் விளைவு இந்நூல் என்று நூலின் முகவுரையில் குறிப்பிடப்படுகிறது. இந்நூலிலோ, வேறு எங்குமோ இப்பிரச்சினைக்கான மார்க்சிய-லெனினிய வழிகாட்டும் நெறிகள் எதையும் அவர் தொகுத்து முன்வைக்கவில்லை.

மார்க்சிய ஆசான்களிடமிருந்து அவர் எடுத்துக்கொண்ட ஒரே வழிகாட்டும் நெறி ஒடுக்கப்படும் ஒவ்வொரு தேசிய இனத்துக்கும் சுயநிர்ணய உரிமை உண்டு என்பதை மட்டும்தான். இதன் அடிப்படையில் இந்தியாவில் எல்லா தேசிய இனங்களுக்கும் சுயநிர்ணய உரிமை வழங்கப்பட வேண்டும் என்றும், பிரிந்துபோகும் உரிமையுள்ள தேசிய இனக் குடியரசுகளின் ஒன்றியமாக இந்திய அரசமைப்பு மாற்றி அமைக்கப்பட வேண்டும். என்றும் அவர் அந்த நூலில் கோரிக்கை வைத்திருக்கிறார். இது ஒன்றும் புதிய கண்டுபிடிப்பல்ல. அதற்கு இருபது ஆண்டுகளுக்கு முன்பே (1970) சி.பி.ஐ.(எம்.எல்) கட்சித்திட்டத்தில் இடம் பெற்றிருந்த

படிப்பகம்

www.padippakam.com



கோரிக்கைகளே இவை.

எல்லா தேசிய இனங்களுக்கும் சுயநிர்ணய உரிமை உண்டு என்கிற மார்க்சிய-லெனினிய வழிகாட்டு நெறியின் அடிப்படையில் இந்தியாவில் உள்ள எல்லா தேசிய இனங்களுக்கும் சுயநிர்ணய உரிமை வழங்கப்பட வேண்டும் என்று கோரியது சரிதான். ஆனால் அது பிரிந்து போகும் உரிமையுள்ள தேசிய இனக் குடியரசுகளின் ஒன்றியமாக அமைய வேண்டும் என்ற முடிவுக்கு வருவதற்கு உதவிய மார்க்சிய-லெனினிய வழிகாட்டும் நெறி எது என்பது குறித்த எந்த விளக்கமும் அவரிடத்தில் இல்லை.

இதில் வியப்பதற்கு எதுவும் இல்லை. காரணம் இந்த முடிவுக்கு வர அவருக்கு வழிகாட்டிய தத்துவம் மார்க்சிய-லெனினியம் அல்ல. மாறாக ஏகாதிபத்திய வாதமே.

"**ஒன்றுபட்ட இந்தியாவுக்குள்** ஒவ்வொரு தேசிய இன மக்களும் அவரவர் தேவை - புரிதல் - முதிர்ச்சிக்கு ஏற்ப பிரச்சினைகளுக்கு அவரவர் தீர்வுகாண வாய்ப்பிருக்க வேண்டும். இந்த வாய்ப்புதான் அனைத்து தேசிய இன மக்களும் **இந்தியாவின் ஒற்றுமையை மனப்பூர்வமாக பாதுகாப்பதற்கு** வழிகோலும்." *(அழுத்தம் எமது)*

*(இந்தியாவில் தேசிய இனங்கள் மற்றும் தன்னுரிமை மாநாட்டுத் தீர்மானங்கள்)*

தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை என்பது அவற்றின் ஜனநாயக உரிமை; அதைப் பெறுவதன் நோக்கம் அவை சுதந்திரமான தேசிய அரசுகளை அமைத்துக் கொள்வது என்று மார்க்சிய ஆசான்கள் கருதினர். ஆனால் பெ.ம.விற்கோ இந்தியாவில் தேசிய இனங்கள் சுயநிர்ணய உரிமை பெறுவதன் நோக்கம் ஒன்றுபட்ட இந்தியாவும், இந்தியாவின் ஒற்றுமையை மனப்பூர்வமாகப் பாதுகாப்பதும் என்பதாக இருக்கிறது. ஒன்றுபட்ட இந்தியாவையும், இந்தியாவின் ஒற்றுமையைப் பாதுகாப்பதையும் நோக்கமாக வைத்துக் கொண்டு தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைப் பற்றிப் பேசுவது ஏகாதிபத்திய வாதமே அன்றி மார்க்சியமல்ல. காரணம் ஒவ்வொரு தேசிய இனமும் தனிநாடு அமைத்துக் கொள்வதற்கான உரிமையை அது முன் கூட்டியே பறித்து விடுகிறது.



உண்மை என்னவெனில், ஒடுக்கப்படும் தேசிய இனப் பாட்டாளி வர்க்கம் எத்தகைய நிலைமைகளில் சுயநிர்ணய உரிமையுடன் ஒரு கூட்டரசில் இணைந்து கொள்ளும் திட்டத்தை முன்வைத்துப் போராட வேண்டும், எத்தகைய நிலைமைகளில் தனியரசு - தனிநாட்டுக்கான திட்டத்தை முன்வைத்துப் போராட வேண்டும் என்பதற்கான மார்க்சிய-லெனினிய வழிகாட்டு நெறிகள் எவையும் பெ.ம.விடம் இல்லை.

"தன்னுரிமைக்காகப் போராடும் ஒரு தேசம் தனிநாடாக அமையுமா அல்லது கூட்டாட்சியாக அமையுமா என்பதை எல்லாம் தீர்மானிக்கக் கூடியது தனிமனித விருப்புகளோ அல்லது அமைப்பின் விருப்புகளோ அல்ல, வரலாற்றின் புறச்சூழல்களே அதைத் தீர்மானிக்கின்றன" *(தமிழகம் பக். 13)* என்கிறார் த.தே.பொ.க.வின் மற்றொரு தலைவரான இரா.சோ.

ஆனால் எத்தகைய வரலாற்றுப் புறச்சூழல் இருந்தால் கூட்டாட்சி, எத்தகைய வரலாற்றுப் புறச்சூழல் இருந்தால் தனிநாடு என்ற கோட்பாட்டு முடிவுகள் எவையும் அவரிடமும் இல்லை.

ஆனால் எத்தகைய சூழலில் ஒரு ஒடுக்கப்பட்ட தேசிய இனப் பாட்டாளி வர்க்கம் கூட்டாட்சியினைத் தேர்வு செய்யவேண்டும், எத்தகைய சூழலில் தனிநாடு என்பதைத் தேர்வு செய்ய வேண்டும் என்பதற்கான மார்க்சிய-லெனினிய வழிகாட்டு நெறிகளை கார்முகில் *(காண்க : பாட்டாளி வர்க்கத்தின் தேசியக்கொள்கை)* தொகுத்து முன்வைத்திருக்கிறார். அதன் அடிப்படையில் இந்தியாவில் ஒடுக்கப்படும் தேசிய இனமான தமிழ்த்தேசிய இனப் பாட்டாளி வர்க்கம் தனிநாட்டுக்கான தேசிய விடுதலைத்திட்டத்துடன் செயல்பட வேண்டும் என்றும்,கூட்டாட்சிக் கோரிக்கையை முன்வைப்பது சட்டவாதமும், சந்தர்ப்பவாதமும் ஆகும் என்றும் முடிவுகள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன.

கார்முகில் தொகுத்து முன்வைத்திருக்கும் மார்க்சிய-லெனினிய வழிகாட்டும் நெறிகளையும்,அதனடிப்படை யிலான முடிவுகளையும் பிதற்றல் என்று சீறுகிறார் பிதற்றல் திலகம் பெ.ம.

படிப்பகம்

www.padippakam.com



"ஒடுக்கப்படும் ஒரு தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கைக்கும் அல்லது விடுதலைக் கோரிக்கைக்கும் ஒடுக்கும் தேசிய இனத்தில் சிறந்த பாட்டாளி வர்க்கக் கட்சி இருப்பதற்கும் இடையே மூலவுத்தி சார்ந்த உறவு எதுவும் இல்லை" (தமிழர் கண்ணோட்டம் ஜூன் 2004) என்கிறார். இதற்கு ஆதாரமாக புளுகு மூட்டைகளை அவிழ்த்து விடுகிறார்.

1917 டிசம்பரில் ஒடுக்கும் ரஷ்ய தேசிய இனத்தில் பலம் வாய்ந்த பாட்டாளி வர்க்கக் கட்சி லெனின் தலைமையில் இருந்தபோது பின்லாந்து பிரிவினையை லெனின் ஆதரித்தார் என்றும், பிரிட்டனில் ஒடுக்கும் தேசிய இனமான ஆங்கிலேயர்களிடம் பாட்டாளி வர்க்க இயக்கம் பலமாக இருந்தபோது - அதுவும் விரைவில் சோசலிசப் புரட்சி நடைபெறப் போகும் நாடுகளில் ஒன்றாக பிரிட்டனைக் கணித்திருந்தபோது அயர்லாந்து விடுதலையை மார்க்ஸ் ஆதரித்தார் என்றும் உண்மை வரலாற்றைத் திரித்துப்புரட்டிக் கூறுகிறார் அதிமேதாவி பெ.ம.

1917 டிசம்பரில் ஜார் ஆட்சி வீழ்த்தப்பட்டு லெனின் தலைமையிலே ரசியாவில் புரட்சி வெற்றி பெற்றிருந்தது. எல்லா தேசிய இனங்களுக்கும் பிரிந்து செல்லும் உரிமை உட்பட சுயநிர்ணய உரிமை வழங்கப்பட்டிருந்தது. ரசிய தேசிய இனம் அப்போது ஒடுக்கும் தேசிய இனமாக இல்லை. எனினும் தனக்குள்ள பிரிந்து செல்லும் உரிமையை - சுயநிர்ணய உரிமையைப் - பயன்படுத்தி பின்லாந்து ரஷ்யா விலிருந்து பிரிந்து சென்றது. அது பிரிந்து செல்வதில் லெனினுக்கு உடன்பாடு இல்லை எனினும் அனுமதித்தார். காரணம் பின்லாந்தின் பிரிந்து செல்லும் உரிமையை அவர் மதித்தார். பிரிந்து செல்ல அனுமதித்தார் என்பதையே ஆதரித்தார் என்றும், ரஷ்ய தேசிய இனம் அப்போதும் ஒடுக்கும் தேசிய இனமாக இருந்தது என்றும் உண்மையைப் புரட்டிப் புளுகுகிறார் பெ.ம. அதுமட்டுமல்ல, அவ்வாறு லெனின் அனுமதித்தது சட்டவாதமா என குதர்க்கம் பேசுகிறார்.

பிரிட்டன் தொழிலாளி வர்க்கம் ஒரு புரட்சியை நடத்தும் என்று நம்பியபோது அயர்லாந்து பிரிந்து செல்வதை மார்க்ஸ் ஆதரிக்கவில்லை. மாறாக பிரிட்டன் தொழிலாளி வர்க்கம் பிற்போக்கில் ஊட்டம் பெற்று மிதவாதிகளுக்கு வால்பிடிக்கும் வர்க்கமாக மாறி பிற்போக்கு ஓங்கி நின்ற வேளையில் - அயர்லாந்தில் முதலாளிய விடுதலை இயக்கம் முன்னணிக்கு வந்து கொண்டிருந்த வேளையில்தான் அவர் அயர்லாந்து விடுதலையை ஆதரித்தார். இவை எல்லாம் வரலாற்று உண்மைகள்.



சந்தர்ப்பவாதி பெ.ம. இந்த வரலாற்று உண்மைகளுக்கு மாறாக உண்மைகளைத் திரித்து புளுகு மூட்டைகளை அவிழ்த்து விடுவதன் மூலம் கார்முகில் தொகுத்து முன்வைக்கும் மார்க்சிய-லெனினிய வழிகாட்டும் நெறிகளை மறுக்க முயலுகிறார்.

மேதாவி பெ.ம. இப்படி பொய் புரட்டுகள் மூலம் மா-லெ கோட்பாடுகளை மறைக்க முயல்வது ஏன்? ஏனெனில் அவர் ஒன்றுபட்ட இந்தியா, இந்திய ஒற்றுமையை மனப்பூர்வமாகப் பாதுகாப்பது எனும் ஏகாதிபத்தியவாதக் கோட்பாடுகளால் வழிநடத்தப்படுகிறார். அந்தக் கோட்பாடுகளின் அடிப்படையிலேயே அவர் தன்னுரிமைக் கொள்கையைக் கண்டு பிடித்திருக்கிறார். மார்க்சிய-லெனினியக் கோட்பாடுகள் அவருடைய ஏகாதிபத்தியவாதக் கோட்பாடுகளுக்கு எதிரானவை என்பதால் பொய் புரட்டுகளால் தன்னைப் பாதுகாத்துக்கொள்ளும் முயற்சியில் இறங்கியிருக்கிறார். பொய் புரட்டுகளுடனான நட்பு கூடாநட்பு என்பதை அவருக்கு யாராவது சொல்ல வேண்டும்.

# 5

## இந்தி தேசிய இனம்: ஒடுக்கும் தேசிய இனமா? தேசிய ஒடுக்குமுறை வாதமா?

இந்தி தேசிய இனம் உருவாகிவிட்டது; அது ஒடுக்கும் தேசிய இனமாக இருக்கிறது என வாதாடுகிறார் பெ.ம.

உ.பி., ம.பி., பீகார், ராஜஸ்தான், அரியானா, டில்லி போன்ற

படிப்பகம்

www.padippakam.com



வட இந்திய மாநிலங்கள் இந்தி தேசிய இன மாநிலங்கள் என்பது அவரது வாதம். அம்மாநிலங்களில் போஜ்புரி, மைதிலி, அவதி, கல்யாணி, போடோ, குருக், சந்தால், பாஞ்சாலி, கௌதாலி, பிலி என எண்ணற்ற மொழிகள் பேசும் தேசிய இனங்கள் அல்லது தேசிய இனங்களாக வளர்ச்சி பெற்று வரும் மக்கள் சமூகங்கள் இருக்கின்றன. இம்மாநிலங்களில் குறைந்தது இரண்டு டஜன் மொழிகளாவது தேசிய மொழிகளாக அங்கீகரிக்கப்பட வேண்டும் என்றும், கௌதாலி என்ற மொழியின் அடிப்படையில் குருஜன்பாத் மாநிலம், பாஞ்சாலி என்ற மொழியின் அடிப்படையில் புண்டல்கண்ட் மாநிலம், கௌராவி என்ற மொழியின் அடிப்படையில் வட, தென் கோசல மாநிலங்கள் அமைக்கப்பட வேண்டும் என்றும் அறிஞர் ராகுல சாங்கிருத்தியாயன் வலியுறுத்தினார். உ.பி.யில் மைதிலி, கடிபோலி மொழிபேசும் மக்கள் தனித்தனி மாநிலமாக அமையும் தகுதி படைத்தவர்கள் என்று தினமணியும் (13-09-1992) சந்தால் மொழிபேசுவோர் இரண்டு கோடிப் பேர் என இந்தியன் எக்ஸ்பிரசும் (03-12-1992) எழுதின. பீகாரில் மட்டும் 160 லட்சம் பேர் போஜ்புரி, மைதிலி, மகதி மொழி பேசுவோர் என இந்திய கெஜட்டியர்(1961) கூறுகிறது. இதனால் "இம்மாநிலங்கள் இந்துஸ்தானி தேசம் என்றோ, இந்தி மொழிபகுதி என்றோ வரையறுக்க எவ்வித பண்பாட்டு, மொழி அடிப்படையும் இல்லை" (எஸ்.வி.ஆர்: இந்தி இந்து இந்தியா பக். 145).

எனினும் இம்மாநிலங்களில் கல்வி மொழியாகவும் ஆட்சிமொழியாகவும் இந்தி திணிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக இந்தி இம்மாநிலங்களில் மேல் தட்டு வர்க்க-சாதியினரின் பொதுமொழியாக மாறியிருக்கிறது. இதை வைத்துக் கொண்டு இம்மாநிலங்களின் பொது மொழியாக இந்தியே உள்ளது என்றும் எனவே இம்மாநிலங்கள் இந்தி தேசிய இன மாநிலங்கள் என்றும் வாதம் செய்கிறார் பெ.ம.

தரகு முதலாளிய-பார்ப்பனிய ஏகாதிபத்தியவாதிகள் இம்மாநிலங்களை எல்லாம் இந்தி மாநிலங்கள் என்றும்,இங்கு வாழும் மக்கள் எல்லாம் இந்தி பேசும் மக்கள் என்றும், இம்மக்கள் பேசும் மொழிகள் எல்லாம் இந்தியின் கிளை மொழிகளே என்றும், இம்மொழிகளில் உள்ள இலக்கியங்களெல்லாம் இந்தி இலக்கியங்களே என்றும் உண்மையைத் திரித்துக் கூறி இந்தியாவில் 27% பேர் இந்தி பேசும் மக்கள் என்பதாக மோசடிக் கணக்கு ஒன்றைக் காட்டி வருகிறார்கள். இந்தியாவின் ஆளும் வர்க்க நலன்களுக்கு இந்த பொய்யான மோசடிக் கணக்கு அவசியம் ஆகலாம் (இந்த பொய்க் கணக்கை 1973இல் வெளியான கெஜட்டியர் ஆப் இந்தியா vol. I அம்பலப்படுத்திவிடுகிறது).



ஆனால் பெ.ம.வும் ஆளும் வர்க்கங்கள் முன்வைக்கும் அதே மோசடிக்கணக்கையே தனது வாதத்திற்கு ஆதாரமாக முன் வைக்கிறார். 1961இல் இந்தியாவில் 27% பேர் இந்தி பேசும் மக்கள் என்கிறார். அவர்கள் பேசும் மொழிகளை எல்லாம் இந்தியின் கிளை மொழிகள் என்றும், அம்மக்களை எல்லாம் இனக் குழுக்கள் என்றும் சிறுமைப்படுத்துகிறார்.

அதுமட்டுமல்ல,வட இந்தியாவில் உள்ள மக்கள் சமூகங்கள் எல்லாம் இந்தி தேசிய இனம்தான் என்பதை உறுதிப்படுத்துவதற்கு ஸ்டாலினையும் திரித்துக் கூற அவர் தயங்கவில்லை.

ஸ்டாலின் ஒரு தேசிய இனத்தின் பொது மொழி பற்றிக் கூறுகையில் "பொது மொழி" என்றுதான் கூறினாரே தவிர "தாய்மொழி" என்று கூறவில்லை என்கிறார்.(த.தே. புதிய கேள்விகள்).

தாய்மொழிதான் ஒரு தேசிய இன சமூகத்தின் பொதுமொழியாக இருக்கும் என்பதால் அவர் பொதுமொழி என்று குறிப்பிட்டது தாய்மொழியையே என்பது சந்தேகத்திற்கு இடமில்லாதது. அதனால்தான் "பொது மொழி என்பது மக்களால் பேசப்படும் மொழிகளையே தவிர அரசு உபயோகத்தில் இருக்கும் மொழியை அல்ல" என்பதையும் வலியுறுத்திச் சொன்னார். ஆனால் பொது மொழி என்று ஸ்டாலின் கூறியிருக்கிறார் என்ற போர்வையில் தாய்மொழியைத் தூக்கி எறிந்துவிட்டு அந்த இடத்தில் அரசு அலுவல் மொழியைத் திணிக்கும் சித்து வேலையைச் செய்கிறார் பெ.ம.

படிப்பகம்

www.padippkam.com



அதுமட்டுமல்ல, மனிதகுல வரலாற்றில் தேசிய இன உருவாக்கம் பற்றி எவ்வித அடிப்படை மார்க்சிய அறிவும் இல்லாமல் தேசிய இனம் என்பதே முதலாளித்துவ வளர்ச்சிக் காலத்தில் தோன்றும் கருத்தாக்கம் என்றும், இராஜராஜ சோழன் காலத்தில் தமிழ்த் தேசிய இனம் உருவாகி இருக்கவில்லை என்றும் உளறுகிறார் (இந்தியாவில் தேசிய இனங்கள்). ஆனால் தேசிய இன சமூகங்கள் வர்க்க சமுதாயத் தோற்றத்துடன் தோன்றி சோசலிச சமுதாயம் வரையிலும் நீடித்திருக்க கூடியவையாகும்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாறு கொண்ட தமிழ்த் தேசிய இன வரலாற்றையே மறுக்கின்ற பெ.ம. வட இந்தியாவில் அந்த அளவுக்குப் புகழ் பெற்ற வரலாற்றையும், மரபுகளையும் பெற்றிராத பல்வேறு தேசிய இனச் சமூகங்களையும், உருவாகி வரும் தேசிய இனச் சமூகங்களையும், அங்கீகரிக்காததில் வியப்பேதும் இல்லை. எனவேதான் அவற்றை எல்லாம் இனக்குழுக்கள் என்றும், மரபினங்கள் என்றும், அவற்றின் மொழிகள் எல்லாம் கிளை மொழிகள் என்றும் சிறுமைப்படுத்துகிறார். அதாவது இந்தி தேசிய இன உருவாக்கத்தில் அவையெல்லாம் ஒழிக்கப் படுவதை ஆதரிக்கிறார்.

இவ்வாறெல்லாம் முயன்று வட இந்திய மாநிலங்கள் எல்லாம் இந்தி மாநிலங்களாகி விட்டன என்று எக்காளமிடுகிறார் பெ.ம.

இந்தியாவில் ஒடுக்கும் தேசிய இனம் ஒன்றைக் கண்டுபிடிக்கப் பயணம் புறப்பட்ட பெ.ம. எப்படியோ வட இந்தியாவில் உள்ள பல்வேறு தேசிய இனச் சமூகங்களையும் ஒழித்துக்கட்டி ஒரு ஒடுக்கும் தேசிய இனத்தை உருவாக்கிய வெற்றி வீரராக உலா வருகிறார். இதுதான் ஆளும் வர்க்கங்களின் ஆசை. இந்த ஆசையை ஒடுக்கப்படும் தேசிய இனத்தைச் சேர்ந்த ஒருவர் நிறைவேற்றி வைப்பார் என்று ஆளும் வர்க்கங்கள் கூட எதிர்பார்த்திருக்க மாட்டார்கள்.

அந்த மக்கள் "இந்திக்காரர்கள்" என்ற உளவியல் உருவாக்கம் பெற்றுவிட்டதாகவும், வேறு பெருமைகள் எதுவும்



அந்த இன மக்களுக்கு இல்லாததால் அவர்கள் இயல்பாகவே இந்தி தேசிய இனமாக மாறிவிட்டார்கள் என்றும், அம்மக்களின் குழந்தைகள் தமது தாய்மொழியைவிட இந்தியையே பயில்கிறார்கள் என்றும் இந்திய ஆளும் வர்க்க ஆதிக்கவாதிகள் பரப்பும் கருத்துக்களை அப்படியே கூச்சமின்றி வாந்தி எடுக்கிறார். (த.தே. புதிய கேள்விகள்)

ஒவ்வொரு தேசிய இனத்திற்கும்- மக்கள் சமூகத்திற்கும் சிறிதோ, பெரிதோ அதன் வரலாறும், பண்பாடும் பெருமைக்குரியதுதான். அதை ஆதிக்கவாதிகள் அங்கீகரிக்க மாட்டார்கள்; இழிவுபடுத்துவார்கள். தம்மைப் பற்றிய உயர்வான கருத்துக்களைப் பரப்பி ஏற்கச் செய்வார்ள். இதைத்தான் எஜமானனின் வெற்றியில் மகிழ்ச்சியைத் தேடும் அடிமையைப் போல் செய்கிறார் பெ.ம.

தாம் இந்தியர்கள் என்கிற உளவியல் உருவாக்கமும், தம் இனம் குறித்த தாழ்வு மனப்பான்மையும், தம் மொழிக் கல்வியைவிட பிறமொழிக் கல்வியின் மீதான மோகமும் கொண்டுள்ளதால் தமிழ்த்தேசிய இனம் இந்திய தேசிய இனமாக மாறிவிட்டது என்று சொல்லிவிட முடியுமா? ஆதிக்கவாதிகளால் பரப்பப்பட்டு, ஒரு தேசிய இன மக்களிடையே நோய்களாகப் பரவிவிட்ட இப்பிரச்சினை களை எதிர்த்துப்போராடி களைவதுதான் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையில் அக்கறை கொண்டவர்களின் கடமையாக இருக்க முடியும்.

ஆனால் இந்தக் காரணங்களை முன்வைத்து வட இந்தியாவில் உள்ள தேசிய இன சமூகங்கள் எல்லாம் இந்தி தேசிய இனமாகி விட்டது என்கிறார் பெ.ம. ஒடுக்கப்படும் தேசிய இனத்துக்கு ஆதரவாகப் போராடக் கிளம்பிய பெ.ம. ஒடுக்கும் தேசிய இனத்துக்கு ஆதரவாக அணிவகுத்து நிற்பது எப்படி! எப்படியானாலும் பெ.ம.வின் இந்தி தேசிய இனக் கனவுகளுக்கு எதிராகவே வட இந்திய மாநிலங்களில் மொழி அடிப்படையிலான மக்கள் சமூகங்களின் கோரிக்கைகள் வலுத்து வருகின்றன. சட்டிஸ்கரி, புண்டல்கண்ட், உத்திரகண்ட், ஜார்கண்ட் போன்ற மாநிலங்களுக்கான கோரிக்கைகள் அதற்கான சில எடுத்துக்காட்டுகளே!

படிப்பகம்

www.padippkam.com



# 6

## தரகு தேசியம்: "பரிணாம" வளர்ச்சியில் வந்த "துல்லியமான" முடிவு

இந்தியாவில் தேசிய இன ஒடுக்குமுறை குறித்து தனது நிலைப்பாடுகளை த.தே.பொ.க. கடந்த பத்தாண்டுகளில் மூன்று முறை மாற்றிக் கொண்டிருக்கிறது. கடைசியாக அது வந்தடைந்துள்ள நிலைப்பாடுதான் "துல்லியமானது" என்றும் "பரிணாம வளர்ச்சியில்" வந்தடைந்த நிலைப்பாடு என்றும் கூறிக்கொள்கிறார் பெ.ம.(ஜூன் 2004 தமிழர் கண்ணோட்டம்)

இந்தியாவில் தேசிய இன ஒடுக்குமுறை குறித்து 1990இல் த.தே.பொ.க பின்வருமாறு கூறியது.

"இந்தியாவில் உள்ள தேசிய இன ஒடுக்குமுறை முற்றிலுமாக ஒரு பெருந்தேசிய இன ஒடுக்குமுறையைச் சார்ந்ததல்ல. அரசமைப்பு என்ற கட்டமைப்பு மூலம் தேசிய இனங்கள் ஒடுக்கப்படுகின்றன. அரசமைப்பில் தலைமை தாங்கும் பெரு முதலாளிகளும் அதில் உறுப்பாயுள்ள நிலப்பிரபுக்களும் பெருமுதலாளிகளுடன் சேர்ந்துள்ள பன்னாட்டு முதலாளிகளும் கட்டமைப்பு ஒடுக்குமுறையின் மூலவர்கள்".

"தேசிய இன ஒடுக்குமுறையில் இது இந்திய வகையிலானது அல்லது தனித்தன்மை பெற்றது".

"தேசிய இனங்களின் தன்னுரிமைக்கும் கட்டமைப்பு ஒடுக்குமுறைக்கும் இடையிலான முரண்பாடுதான் முதன்மையான முரண்பாடு"

(தன்னுரிமை மாநாட்டுத் தீர்மானங்கள்)

1992இல் மேற்கண்ட தனது நிலைப்பாடுகளில் சில மாற்றங்களைச் செய்தது. கட்டமைப்பு ஒடுக்குமுறையின் மூலவர் பதவியிலிருந்து நிலப்பிரபுக்களையும், பன்னாட்டு முதலாளிகளையும் தூக்கி எறிந்துவிட்டு அந்த இடத்தில் பார்ப்பனிய சக்திகளையும், இந்தி தேசிய இனத்தையும் வைத்தது. பெருமுதலாளிகள் தலைமையிலான முதலாளிய-பார்ப்பனிய-இந்தி ஆதிக்க டில்லி அரசுக்கும் தமிழ்த்தேச மக்களுக்கும் இடையிலான முரண்பாடுதான் முதன்மை முரண்பாடு என அறிவித்தது. கட்டமைப்பு ஒடுக்குமுறையை அது கைவிடவில்லை.



(மேற்படி நூல்)

1997லிருந்து இந்த நிலைப்பாட்டையும் மாற்றிக் கொண்டது.

இந்தி தேசிய இனம்தான் ஒடுக்கும் தேசிய இனமாக ஆதிக்கம் செலுத்தி வருகிறது என்றும், மார்வாரிகளும், சேட்டுகளும் தமிழ்நாட்டில் தொழிற்சாலைகளையும், மொத்த வணிகத்தையும், சில்லரை வணிகத்தையும் புயல் வேகத்தில் கைப்பற்றி வருகின்றனர் என்றும், எனவே சேட்டுகள் உள்ளிட்ட இந்தி தேசிய இன ஆதிக்கத்திலிருந்து தமிழ்த்தேசிய இனத்தை விடுவிப்பதுதான் முதற் பெரும் கடமை என்றும், முதன்மை முரண்பாடு ஒடுக்கும் இந்தி தேசிய இனத்துக்கும் ஒடுக்கப்படும் தமிழ்த் தேசிய இனத்துக்கும் இடையிலானது என்றும், இந்தி தேசியம் தான் இந்திய தேசியமாக முன்மொழியப்படுகின்றது என்றும் அது கூறிவருகிறது.

(த.தே.புதிய கேள்விகள்)

இந்த மாற்றப்பட்ட நிலைப்பாடுகள் எல்லாம் அதன் கொள்கை அறிக்கையில் இடம் பெறவில்லை என்றாலும் அதன் தலைவர் இப்படித்தான் விளக்கி வருகிறார். தலைவரே சொல்லிவிட்டார். அப்புறம் என்ன? கொள்கை அறிக்கையாம் கொள்கை அறிக்கை. வெங்காயம்.

இப்படியாக த.தே.பொ.க. "பரிணாம வளர்ச்சியில்" கடைசியாக வந்தடைந்த நிலைப்பாட்டின்படி,இந்திய ஆளும் வர்க்கங்களில் இரண்டு பிரிவுகள் உண்டு. முதல் பிரிவு சேட்டுகள் உள்ளிட்ட இந்தி தேசிய இனத்தைச் சேர்ந்த பிரிவு. தேசிய இன

படிப்பகம்

www.padippkam.com



ஒடுக்குமுறையாளர் பதவியை ஏகபோகமாக இந்தப் பிரிவுக்கு வழங்கிவிட்டது த.தே.பொ.க. மற்றொரு பிரிவு இந்தி தேசிய இனத்தில் இல்லாத பிரிவு. அதாவது இந்தி தேசிய இன ஒடுக்குமுறைக்கு உள்ளாகும் பிரிவு. இந்தப் பிரிவை தேசிய இன ஒடுக்குமுறையாளர் பதவியிலிருந்து த.தே.பொ.க. விடுதலை செய்து விட்டது. இவ்வாறு இந்திய ஆளும் வர்க்கத்தில் இருபிரிவுகளையும், அவற்றுக்கு இடையிலான முரண்பாடுகளையும் கண்டுபிடித்திருக்கிறது த.தே.பொ.க. இந்த கண்டுபிடிப்புக்குத் துணைசேர்க்கும் வகையில், "இந்தி தேசியம்தான் இந்திய தேசியமாக முன்மொழியப்படுகிறது" என்று ஒரு விரிவுரை எழுதி இருப்பதுடன், "இந்திய வகையிலான" "தனித்தன்மை பெற்ற" "கட்டமைப்பு ஒடுக்குமுறைக்கு" முடிவு கட்டிவிட்டது.

இந்தி தேசியம்தான் இந்திய தேசியமாக முன்மொழியப் படுகிறது என்று கூறுவதன் மூலம், இந்தியா முழுவதும் உள்ள தரகு முதலாளிய-பார்ப்பனிய ஆற்றல்களின் தேசிய இன ஒடுக்குமுறை ஏகாதிபத்தியம்தான் இந்திய தேசியம் என்பதை மறைத்து அதை ஒரு இனம் சார்ந்ததாக சுருக்குகிறது. பிற தேசிய இனம் சார்ந்த தரகு முதலாளிய-பார்ப்பனிய ஆற்றல்களுக்கு ஒரு முற்போக்கு முகமூடியை அணிவிக்கிறது.

இதன்படி, த.தே.பொ.க. முன்வைக்கும் ஒடுக்கும் தேசிய இனத்துக்கும் ஒடுக்கப்படும் தமிழ்த் தேசிய இனத்துக்கும் இடையிலான முரண்பாடு என்பது இந்தி தேசிய இனத்தைச் சேர்ந்த ஆளும் தரகு முதலாளிய வர்க்கப் பிரிவுக்கும், தமிழ்த்தேசிய இனத்தைச் சேர்ந்த ஆளும் தரகு முதலாளிய வர்க்கப் பிரிவுக்கும் இடையிலான முரண்பாடேயாகும். அதாவது, ஆளும் வர்க்கங்களுக்கு இடையேயான முரண்பாட்டையே ஆளும் வர்க்கங்களுக்கும், மக்களுக்கும் இடையிலான முரண்பாடு என்பது போல த.தே.பொ.க. முன்வைக்கிறது.

இந்தக் கண்டுபிடிப்புகளின்படி தமிழ்நாட்டிலிருந்து வேற்று தேசிய இனத்தைச் சேர்ந்த குறிப்பாக மார்வாரி, சேட்டுகள் உள்ளிட்ட இந்தி தேசிய இனத்தைச் சேர்ந்த தரகு முதலாளிகள்



ஆதிக்கம் ஒழிக்கப்பட வேண்டும். இதுதான் தமிழ்த்தேசிய இன விடுதலை; தன்னுரிமை பெற்ற தமிழ்த்தேசம், தமிழ்தேசக் குடியரசு என்பதன் நோக்கம்.

அதாவது தரகு மூலதனத்துக்கு முடிவு கட்டுவதல்ல. இந்தி தேசிய இனத்தைச் சேர்ந்த தரகு முதலாளிகளின் மூலதனத்துக்கு முடிவுகட்டுவதும், தமிழகத்தில் தமிழ்த்தேசிய இனத்தைச் சேர்ந்த தரகு முதலாளிகள் மட்டுமே இருக்க வேண்டும் என்பதுதான் த.தே.பொ.க.வின் கோரிக்கை; தமிழ்த்தேசிய இன விடுதலைக்கு அது கொண்டிருக்கும் பொருள். எவ்வாறாயினும் தன்னுரிமையுள்ள தமிழ்த்தேசக் குடியரசில் தரகு முதலாளிகள் ஆதிக்கம்தான் என்பதால் தரகு முதலாளிய ஆதிக்கத்திலிருக்கும் இந்திய ஒன்றிய அரசுடன் ஒரு ஒப்பந்தத்தின் மூலம் ஒன்றாக இருப்பதில் முரண்பாடு எதுவும் இல்லை. இது தான் த.தே.பொ.க. கோரும் தேசிய இனங்களுக்கு இடையிலான "புதிய ஒப்பந்தம்". அதாவது தரகு தேசங்களுக்கு இடையிலான ஒப்பந்தம் - "தன்னுரிமை பெற்ற இறையாண்மையுள்ள தேசங்களின் கூட்டமைப்பு இந்தியா".

பாட்டாளி வர்க்கம், தரகு தேசங்களுக்கும், தரகு தேசங்களுக்கு இடையிலான ஒப்பந்தங்களுக்கும் எதிரானது. அது பாட்டாளி வர்க்க தேசியத்திற்காகவும், பாட்டாளி வர்க்கச் சர்வதேசியத்திற்காகவும் போராடுகிறது. அதனால் தான் த.தே.பொ.க. பாட்டாளி வர்க்கத் தலைமையையும், பாட்டாளி வர்க்கத் தத்துவத்தையும் தூக்கி எறிந்துவிட்டது.

இப்போது தரகு தேசியத்தை நோக்கித் தடையற்ற வகையில் பீடுநடை போட முடியும்; போடுகிறது.

தமிழ் நாட்டில் உள்ள பன்னாட்டு தொழில் நிறுவனங்களிலும் வட இந்தியர் நடத்தும் தரகு முதலாளிய நிறுவனங்களிலும் மூலதனத்தில் 33% பங்கு, தரகு முதலாளிய நிறுவனங்களில் வேலைவாய்ப்பில் 80% பங்கு; இப்படி ஒரு முழக்கத்தை வைத்து த.தே.பொ.க. இரண்டாண்டுகளுக்கு முன் பொதுக்கூட்டங்கள் நடத்தியது. இதுதான் த.தே.பொ.க.வின் அரசியல்; தரகு முதலாளிய நிறுவனங்களை ஒழிப்பதல்ல;

படிப்பகம்

www.padippkam.com



அவற்றைப் பாதுகாப்பது, பங்கு கேட்பது என்பதுதான் அதன் கொள்கை.

மூலதனத்தில் 33% பங்கு, வேலைவாய்ப்பில் 80% பங்கு என்ற முழக்கத்தை முன்வைத்தபோது "அவ்வாறான இடைக்காலக் கோரிக்கைகள் உடனடி எதிர்காலத்தில் சாதிக்கக் கூடிய தாகவும், சட்டவகையில் அரசால் எளிதில் புறக்கணிக்க முடியாதவையாகவும், இன்றைய சூழலில் அடிப்படை இலக்கு நோக்கி மக்களைத் திரட்டப் பயன்படக் கூடியதாகவும் அமையும்" என்று விளக்கமளித்தார்கள். "இந்த உடனடிக் கோரிக்கைகள் மக்களிடம் வலுப்பெறுவதற்குக்கூடச் சில ஆண்டுகள் பிடித்தால் வியப்பதற்கு இல்லை" என்றும் சொல்லி கொண்டார்கள். இந்தக் கோரிக்கையை சாதித்தப் பின் படிப்படியாக 50%, 75% என கோரிக்கையை உயர்த்தி அயலவர் மூலதனப் பங்கை குறைக்கப் போவதாகவும் கூறிக்கொண்டார்கள். 51% மூலதனப் பங்கு கோருவதுதான் நியாயமானது என்றும் கூறிக்கொண்டார்கள் (காண்க: தமிழர் கண்ணோட்டம் ஆகஸ்ட் 2003). என்றாலும் மூலதனத்தில் 33% பங்கு, வேலைவாய்ப்பில் 80% பங்கு என்ற கோரிக்கைக்காக சில பொதுக்கூட்டங்கள் நடத்தியது தவிர வேறு எதுவும் செய்யவில்லை. இக்கோரிக்கைகள் மக்களிடம் வலுப்பெற்று விட்டதாகவோ, நிறைவேறிவிட்டதாகவோ எந்தச் சுவடும் காணப்படவில்லை. என்றாலும் அந்த கோரிக்கைகளை அப்படியே விட்டுவிட்டு அதிலிருந்து ஒரே தாவாகத் தாவி 'வெளியாரை வெளியேற்றுவோம்' என்ற முழக்கத்துடன் இப்போது ஒரு மாநாடு நடத்துகிறது த.தே.பொ.க.

'வெளியாரை வெளியேற்றுவோம் என்பது புதியதுமல்ல; இதுவே இறுதிப் புரட்சியுமல்ல' என விளக்கம் அளிக்கிறார் அதன் தலைவர் பெ.ம. (தமிழர் கண்ணோட்டம் மே 2005). அதாவது த.தே.பொ.க. தொடங்கும் வெளியாரை வெளியேற்றுவோம் என்ற இயக்கம் பிற மாநிலங்களில் ஏற்கெனவே நடத்தப்பட்டிருக்கும் இயக்கம் போன்றதுதான் என்றும், அது இறுதிப் புரட்சிக்கு முந்திய இடைக்கட்டப் புரட்சி என்றும் கூறுகிறார்.



அவர் உதாரணமாகக் காட்டும் பிற மாநில இயக்கங்களில் ஒன்று பால்தாக்கரே எனும் பாசிஸ்ட் நடத்தும் சிவசேனா இயக்கம். அது மராட்டிய மாநிலத்தில் ஒரு இந்து பாசிஸ்ட் கும்பல் நடத்தும் இனவெறி இயக்கம். வேற்று மாநிலத்தவர் மராட்டியத்தில் இருக்கக் கூடாது என்ற முழக்கத்தின் மூலம் மராட்டிய மாநிலத்தில் உழைக்கும் மக்களை இன வகையில் பிளவுபடுத்தி, மோதவிட்டு ரத்தம் குடிக்கும் காட்டேரிக் கும்பல். அதன் மூலம் மராட்டியத் தரகு முதலாளிய வர்க்கத்தை உழைக்கும் மக்களின் போராட்டங்களிலிருந்து பாதுகாப்பதுதான் அதன் வேலை.

இந்த இனவெறி சிவசேனா பாசிச இயக்கத்தை தனக்கு முன்னுதாரணமான 'புரட்சி' இயக்கமாகக் காட்டுகிறார் பெ.ம. அதன் வழியில் தமிழகத்தில் உழைக்கும் மக்களை இன வகையில் பிளவுபடுத்தி மோதவிட்டு ரத்தம் குடிக்கவும், அதன்மூலம் தமிழகத் தரகு முதலாளிகளுக்குச் சேவை செய்யவும் இன்னொரு பால்தாக்கரேயாகத் தயாராகிக் கொண்டிருக்கிறார் பெ.ம. மராட்டியத்தில் சிவசேனை செய்யும் 'புரட்சியை' தமிழகத்தில் நிகழ்த்த த.தே.பொ.க. தயாராகிக் கொண்டிருக்கிறது.

த.தே.பொ.க. நடத்தப்போகும் இந்தப் 'புரட்சி' தமிழகத்தில் உழைக்கும் மக்கள் மத்தியில் பிளவையும், பூசலையும், மோதலையும் உண்டாக்கும். அதன் மூலம் 1) தரகு முதலாளித்துவத்துக்கு எதிராக தொழிலாளர்கள் ஒன்று படாமல் தடுப்பது, 2) வேலையில்லாத் திண்டாட்டம் உட்பட பல்வேறு பிரச்சினைகளுக்கும் தரகு முதலாளித்துவம் காரணமாக இருப்பதை உழைக்கும் மக்களிடமிருந்து மறைப்பது, 3) தரகு முதலாளியத்தை எதிர்ப்பதற்குப் பதிலாக தரகு முதலாளிகளில் ஒரு பிரிவினரை - வட மாநிலத்தவரை மட்டும் எதிரியாகக் காட்டுவதன் மூலம் தரகு முதலாளியத்தினைப் பாதுகாப்பது போன்ற 'புரட்சிகரமான' பணிகளை நிறைவேற்றப் போகிறார் பெ.ம.

இது 'அ' புரட்சியாம். இதுவே 'ஆ' புரட்சி, 'இ' புரட்சி என முன்னேறி தமிழகத்தில் எல்லாத் தரகு முதலாளிகளையும், பன்னாட்டு நிறுவனங்களையும் ஒழித்துக்கட்டும் 'ஃ' புரட்சியில்

படிப்பகம்

www.padippkam.com



போய் முடியும் என்கிறார் பெ.ம. அதாவது தரகு முதலாளிகளைப் பாதுகாப்பதற்கான 'அ' "புரட்சி" எல்லாத் தரகு முதலாளிகளையும் ஒழித்துக் கட்டுவதற்கான 'ஃ' புரட்சியில் போய் முடியும் என்கிறார். த.தே.பொ.க.வின் தன்னுரிமைப் புரட்சி என்றால் சும்மாவா? இப்படிப்பட்ட மாயா ஜால வித்தைகள் நிறைந்ததுதான் த.தே.பொ.க.வின் தன்னுரிமைப் புரட்சி.

தரகு முதலாளிகளை த.தே.பொ.க. தரகு முதலாளிகள் என்று அழைப்பதில்லை. அவர்களுக்கு தேசிய முதலாளிகள் என்று ஆசையாகப் பெயர் வைத்திருக்கிறது. இந்த முதலாளிகள் ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டத்தில் தலைமைதாங்கி நாட்டை ஏகாதிபத்தியத்திடமிருந்து 'விடுதலை' செய்த வர்க்கம் என்ற நற்சான்றிதழையும் வழங்கி இருக்கிறது. முதலாளிகளைப் பற்றிய இந்த மதிப்பீடுகளை வழங்கியது தனது தாய்க் கட்சியான சி.பி.எம். என்பதால் த.தே.பொ.க.விற்கு இந்த மதிப்பீடுகள் மீது அலாதியான பாசம்.

தரகு முதலாளிகள் என்றால் நாட்டின் நலனைப் பற்றியும், மக்களின் நலனைப் பற்றியும் எள்ளளவும் கவலையின்றி,தமது பணப்பை கொழுப்பதைப் பற்றி மட்டுமே கவலைப்பட்டு,தமது நலன்களை ஏகாதிபத்தியங்களின் நலன்களோடு பிணைத்துக் கொண்டுள்ள முதலாளிகள் என்று பொருள். இத்தகைய முதலாளிகள்தான் இன்று ஆளும் வர்க்கமாக இருக்கிறார்கள். இவர்கள் என்றுமே வரலாற்றில் முற்போக்கான பாத்திரம் ஆற்றியது இல்லை. மக்களின் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டங்களை ஏகாதிபத்தியத்திற்கு ஆதரவாக திசை திருப்பியதுதான் அவர்கள் 'விடுதலை' போராட்டத்திற்கு தலைமையளித்த லட்சணம். இன்று உலகமயம், தனியார்மயம், தாராளமயம் என்ற பெயரில் நாட்டையே பகிரங்கமாக அன்னிய ஏகாதிபத்தியவாதிகளுக்கு கூவி, கூவி விற்றுத் தமது பணப்பையை கொழுக்க வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இத்தகைய தரகு முதலாளிகளுக்கு தேசிய முதலாளிகள் என்று பெயர் சூட்டி வரலாற்றில் அதன் பிற்போக்குப் பாத்திரத்தை முற்போக்குப் பாத்திரம் என்றும்,துரோகத்தை



தேசிய விடுதலை என்றும் த.தே.பொ.க. பாராட்டுகிறது. எனவே த.தே.பொ.க.வைப் பொறுத்தவரை தரகு முதலாளிய சேவையே தேசிய சேவை. ஏகாதிபத்திய எதிர்ப்பு என்பது வெறும் நாடகம்.

பால்தாக்கரே போன்ற பாசிஸ்ட்களை உதாரணமாகக் கொண்டே த.தே.பொ.க. தனது தரகு முதலாளிய சேவையைத் தொடர்கிறது. எனினும், அது ஒரு "பொதுவுடைமைக்" கட்சியல்லவா? எனவே தனது தரகு தேசிய சேவைக்கு ஆதரவாக ஸ்டாலினையும் கேடாகத் துணைக்கு அழைத்து வந்து பித்தலாட்டம் செய்கிறார் பெ.ம.

இரண்டாவது உலகப் போர் நடந்த போது இட்லரின் படை ரஷ்யா மீது தாக்குதல் தொடுக்கும் அபாயம் சூழ்ந்திருந்த வேளையில்,ரஷ்யாவில் இருந்த ஜெர்மனியர்களும், யூத இன மக்களும் பாதிப்புக்கு உள்ளாகி விடக்கூடாதே என்பதற்காக அவர்களைப் பாதுக்காப்பான இடங்களுக்கு மாற்றிக் குடியமர்த்தினார் ஸ்டாலின். இனவேறுபாடுகள் காரணமாக இரு இனமக்களுக்கும் பாதிப்பு ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காக பாதுகாப்பான இடங்களுக்கு அவர்களை மாற்றி குடியமர்த்திய ஸ்டாலின் நடவடிக்கையை, சிவசேனாவின் பால்தாக்கரே போல இனமோதலை உண்டாக்க வேண்டும் என்பதற்காகவே வெளியாரை வெளியேற்றுவோம் என இயக்கம் நடத்தும் தனது நடவடிக்கைக்கு ஆதாரமாகக் காட்டுகிறார் பெ.ம. இப்படி எல்லாம் ஆதாரம் காட்டுவதற்கு சந்தர்ப்பவாதி பெ.ம.வைத் தவிர வேறு யாருக்கும் துணிச்சல் வரமுடியாது.

ஆனால் த.தே.பொ.க.வின் தரகு முதலாளிய சேவையை மறைப்பதற்கு இந்த சந்தர்ப்பவாத வெற்றுத் துணிச்சல் எந்த வகையிலும் பயன்படப் போவதில்லை. மார்க்சியம், பொதுவுடைமை, தமிழ்த்தேசியப் புரட்சி, தன்னுரிமைப் புரட்சி என்றெல்லாம் நாக்கை நீட்டி முழங்குவதும் எவ்வகையிலும் பயன்படப்போவதில்லை.

படிப்பகம்

www.padippakam.com



# 7

## ஒடுக்கும் தேசிய இனம் இல்லை என்பது சி.பி.எம். நிலைப்பாடாம்! அனைத்திந்தியப் புரட்சியாம்! பிதற்றுகிறார் பெ.ம.

ஒடுக்கும் தேசிய இனம் இந்தியாவில் இல்லை என்று சி.பி.எம். கூறுகிறதாம். அவ்வாறு சொன்னால் தர்க்க ரீதியில் அது அனைத்திந்தியப் புரட்சிக்குத்தான் இட்டுச் செல்லுமாம். த.நா.மா.லெ.க.வுக்கு மறுப்பெழுதுவதாக நினைத்துக்கொண்டு உளறிக் கொட்டியிருக்கிறார் பிதற்றல் திலகம் பெ.ம.

வட இந்தியாவில் அரசுரிமை மறுக்கப்பட்ட பல்வேறு தேசிய இனங்களையும் இனக்குழுக்கள் என்றும், அவர்களின் மொழிகளெல்லாம் இந்தியின் கிளை மொழிகள் என்றும் கூறி ஒரே வரியில் அவற்றை எல்லாம் ஒழித்துக்கட்டி ஒடுக்கும் தேசிய இனமாக இந்தி தேசிய இனத்தை உருவாக்கிக் காட்டிய வீரரல்லவா, எப்படி வேண்டுமானாலும் உளறுவார்.

ஒடுக்கும் தேசிய இனம் இல்லை என்று சொல்வது சி.பி.எம். நிலைப்பாடு என்றும், அது தர்க்க ரீதியில் அனைத்திந்தியப் புரட்சிக்கு இட்டுச் செல்லும் என்றும் எதிர்ப்புத் தெரிவிக்கும் இந்தப் பிதற்றல் திலகம் "இந்தியாவில் ஒடுக்கும் தேசிய இனம் இல்லை, கட்டமைப்பு ஒடுக்குமுறையே இருக்கிறது, அது இந்தியாவின் குறிப்பான தனித்தன்மையான ஒடுக்குமுறை-வகை என்றெல்லாம் தன்னுரிமை மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றிய போது அது சி.பி.எம்-ன் நிலைப்பாடு என்று அவருக்குத் தெரியவில்லை; அந்த நிலைப்பாடு தர்க்க ரீதியில் இந்தியப் புரட்சிக்கு இட்டுச் செல்லும் என்றும் அவருக்குத் தெரியவில்லை.

வட மாநிலங்கள் அனைத்தையும் இந்தி தேசிய இன மாநிலங்களாகக் காட்டுவதற்காக ஆளும் வர்க்கங்கள் செய்யும்



முயற்சிகளைப் பட்டியலிட்டு விளக்கி இந்திப் பெருந்தேசிய இனம் இருக்கிறது என்றோ, அது ஒடுக்கும் தேசிய இனமாக இருக்கிறது என்றோ சொல்லமுடியுமா என வினா எழுப்பியிருக்கிறது த.நா.மா.லெ.க. அது மட்டும் அல்ல. ஒடுக்கும் தேசிய இனம் இல்லாத அல்லது ஒடுக்கும் தேசிய இனத்தில் பலம்வாய்ந்த பாட்டாளி வர்க்கக் கட்சி இல்லாத - தேசிய ஒடுக்குமுறை உள்ள பல்தேசிய இன நாடுகளில் தேசிய விடுதலைப் புரட்சிதான் ஒவ்வொரு தேசிய இனப் பாட்டாளி வர்க்கத்தின் முன்னும் உள்ள கடமை என்பதையும் மார்க்சிய-லெனினிய கோட்பாட்டு அடிப்படையிலும், வரலாற்று உதாரணங்களுடனும் விரிவாக, தெளிவாக விளக்கி இருக்கிறது (*காண்க :* பாட்டாளி வர்க்கத்தின் தேசியக் கொள்கை).

ஆனால் தேசிய இனங்களின் வரலாறு குறித்தோ, தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைக்கும்,ஜனநாயகப் புரட்சிக்கும் இடையிலான உறவு குறித்தோ, தேசிய ஒடுக்குமுறை உள்ள ஒரு பல்தேசிய இன நாட்டில் பாட்டாளி வர்க்கத்தின் தேசியக் கொள்கை எவ்வாறு அமைய வேண்டும் என்பது குறித்தோ எந்தவித மார்க்சிய-லெனினிய கோட்பாட்டு அறிவும் இல்லாதவர் பெ.ம.

அதனால் தான் தமிழ்த் தேசத்திற்குத் தன்னுரிமை - சுயநிர்ணய உரிமை வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து தோன்றிய த.தே.பொ.க. அந்தக் கோரிக்கையை பாட்டாளி வர்க்க நிலையிலிருந்து - மார்க்சிய-லெனினிய கோட்பாடுகளின் அடிப்படையில் முன்வைக்கவில்லை.

ஒவ்வொரு தேசிய இனத்திலும் ஜனநாயகப் புரட்சியின் வெற்றி என்பது அதன் தேசிய அரசு அமைக்கும் திசையிலானது. எனவே தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைப் பிரச்சினை ஜனநாயகப் புரட்சியின் வெற்றிக்கு அவசியமான நிபந்தனை என்ற கண்ணோட்டத்தில் அணுகப்பட வேண்டும். இதுதான் பாட்டாளி வர்க்க அணுகுமுறை.

இதற்கு மாறாக ஏற்கெனவே பலாத்காரத்தின் மூலம் உருவாக்கப்பட்டுள்ள அரசு எல்லைகளை ஏற்றுப் பாதுகாக்க

படிப்பகம்

www.padippakam.com



வேண்டும் என்ற கண்ணோட்டத்திலிருந்து இப்பிரச்சினையை அணுகினால் அது ஏகாதிபத்திய வாதம் ஆகும்.

சி.பி.ஐ., சி.பி.எம். கட்சிகள் இப்பிரச்சினையை பாட்டாளி வர்க்கக் கண்ணோட்டத்தில் அல்ல, ஏகாதிபத்தியவாதக் கண்ணோட்டத்திலேயே அணுகின. இதன் விளைவு அவை தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை கட்சித் திட்டத்திலிருந்து எடுத்துவிட்டன. சி.பி.ஐ.(எம்.எல்) கட்சித் திட்டத்தில் சுயநிர்ணய உரிமையை சேர்த்தது. எனினும் அதுவும் ஏகாதிபத்தியவாதக் கண்ணோட்டத்திலிருந்துதான். அதாவது ஜனநாயகப் புரட்சியின் வெற்றிக்குரிய நிபந்தனை என்ற இடத்தில் இருந்து அல்ல. இந்தியாவின் ஒற்றுமையைப் பாதுகாப்பது என்ற நோக்கத்திற்காகவே சி.பி.ஐ., சி.பி.எம். கட்சிகள் கட்சித் திட்டத்திலிருந்து சுயநிர்ணய உரிமையை அகற்றின; சி.பி.ஐ.(எம்.எல்) கட்சித் திட்டத்தில் சுயநிர்ணய உரிமையை சேர்த்துக் கொண்டது. இந்திய ஒற்றுமையை நிபந்தனையாகக் கொண்டு தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைப் பிரச்சினையை அணுகுவது ஏகாதிபத்தியவாதமே ஆகும்.

த.தே.பொ.க. தமிழ்த் தேசத்திற்கு சுயநிர்ணய உரிமை வேண்டும் என்று கோருவதும் இதே ஏகாதிபத்தியவாதக் கண்ணோட்டத்திலிருந்துதான். சி.பி.எம்.-லிருந்து வந்த அந்தக் கட்சி சி.பி.எம்.ன் ஏகாதிபத்தியவாதக் கண்ணோட்டத்தை அப்படியே தனதாக்கிக் கொண்டு சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையை முன்வைத்தது. "இந்தியாவின் ஒற்றுமையை அனைத்து தேசிய இனங்களும் மனப்பூர்வமாகப் பாதுகாப்பதற்கும்", "இந்திய ஒற்றுமைக்காகவும்" தான் அது தமிழ்த் தேசத்தின் சுயநிர்ணய உரிமையைக் கோரியது. சுயநிர்ணய உரிமை கொண்ட தேசிய இனக் குடியரசுகளின் ஒன்றியம் அல்லது குறைந்தது தமிழ்த் தேசிய இனக் குடியரசுக்கு மட்டுமாவது சுயநிர்ணய உரிமை உள்ள இந்திய ஒன்றியம்; இது தான் த.தே.பொ.க.வின் கோரிக்கை.

சுயநிர்ணய உரிமை கொண்ட தேசிய இனக் குடியரசுகளின் ஒன்றியம் என்பதை த.தே.பொ.க.விற்கு இருபது ஆண்டுகளுக்கு



முன்பே சி.பி.ஐ.(எம்.எல்) முன்வைத்திருக்கிறது. அதிலிருந்து த.தே.பொ.க. மாறுபடுவது என்னவெனில் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையையே முழுமையாக்கிக் கொண்டதும், தமிழ்நாடு மட்டுமே தனது செயல்களம் எனத் தீர்மானித்துக் கொண்டதும் தான். இந்த வேறுபாட்டால் த.தே.பொ.க. சி.பி.எம். போல் ஒரு ஏகாதிபத்தியவாதக் கட்சியாக அல்லாமல் தரகு தேசியக் கட்சியாகியது.

சி.பி.எம். இந்தியத் தரகு முதலாளிகளுக்கு தேசிய முதலாளிகள் என மகுடம் சூட்டியிருக்கிறது. த.தே.பொ.க. அந்த மகுடத்தை அப்படியே ஏற்றுக் கொண்டிருக்கிறது. அந்த முதலாளிகளை தேசிய இன எல்லைக்குள் இருக்கும் முதலாளிகள், தேசிய இன எல்லை கடந்து நிற்கும் முதலாளிகள் எனப் பிரித்து, இரண்டாம் வகையினரை பெருமுதலாளிகள் என்றும், ஏகபோக முதலாளிகள் என்றும் அழைக்கிறது.

அதுமட்டுமல்ல, 1947இல் இந்தியா ஏகாதிபத்தியத்திடமிருந்து 'விடுதலை' பெற்று விட்டது; இந்த விடுதலைப் போராட்டத்திற்கு தரகு முதலாளிகள் காங்கிரஸ் கட்சி மூலம் தலைமை தாங்கினார்கள்; 'இந்திய தேசம்' 'விடுதலைப்' போராட்டத்தில் அனைத்து தேசிய இன மக்களையும் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக அணிதிரட்டி முற்போக்கான வரலாற்றுப் பாத்திரம் ஆற்றியது என்றெல்லாம் சி.பி.எம். கூறும் கதைகளை அப்படியே வரிக்கு வரி வழிமொழிகிறது த.தே.பொ.க.

இவ்வாறு சி.பி.எம்.-ன் அடிப்படையான நிலைப்பாடுகளை எல்லாம் அப்படியே வாரிச் சுருட்டி தனதாக்கிக் கொண்டிருக்கும் பெ.ம.தான், ஒடுக்கும் தேசிய இனம் இல்லை என்று சொன்னால் அது சி.பி.ஐ, சி.பி.எம் நிலைப்பாடு என்றும், இந்தியப் புரட்சி என்றும் பிதற்றுகிறார்.

உண்மையில் இந்திய தேசியம் என்பது தரகு முதலாளிய-பார்ப்பனிய ஆற்றல்களின் ஏகாதிபத்தியவாதம் ஆகும். இந்தியாவில் இருக்கும் எல்லா தேசிய இனங்களுக்கும் சுயநிர்ணய உரிமை மறுத்து - அரசுரிமை மறுத்து

படிப்பகம்

www.padippkam.com



இந்தியாவையே ஒரு தேசம் எனக்காட்டும் ஏகாதிபத்தியவாதம் ஆகும். தரகு முதலாளிகள் ஏகாதிபத்திய நலன்களோடு தமது நலன்களைப் பிணைத்துக் கொண்டவர்கள்; எந்த தேசிய இன மக்களின் நலன்களோடும் தமது நலன்களைப் பிணைத்துக் கொள்ளாதவர்கள். தமது விரிவான சந்தை நலன்களுக்காக 'இந்திய தேசத்தோடு' தம்மை இணைத்துக் கொண்டிருப் பவர்கள். அதுபோல பார்ப்பனிய ஆற்றல்கள் எந்த தேசிய இனத்தோடும் தம்மைப் பிணைத்துக் கொண்டவர்கள் அல்லர். இந்தியாவையே ஒரு தேசம் எனக் காட்டுவதன் வாயிலாக அதன் தலைமை ஆதிக்கத்தைக் கைப்பற்றிக் கொண்டிருப்பவர்கள். இவ்வாறு எந்த தேசிய இன மக்களோடும் இணையாத, அதே நேரத்தில் விரிவான சந்தை, நலன் மற்றும் மேலாதிக்க நலன்களுக்காக தரகு முதலாளிய-பார்ப்பனிய ஆற்றல்கள் இணைந்து தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைக்கு எதிராக உருவாக்கிய ஏகாதிபத்திய வாதம் தான் 'இந்திய தேசம்'. அந்த 'தேசத்திற்காக' உருவாக்கப்பட்டு திணிக்கப்பட்ட மொழிதான் இந்தி. இது இந்தியாவுக்கே உரிய தனிச்சிறப்பான தேசிய இன ஒடுக்குமுறை வடிவம் ஆகும்.

இவ்வாறு ஏகாதிபத்தியங்களின் நலன்களோடு இணைந்தும், தேசிய இனங்களின் அரசுரிமையை மறுத்து ஒடுக்கும் ஏகாதிபத்தியவாதமாகவும் இருக்கும் 'இந்திய தேசியம்' தான் ஏகாதிபத்திய எதிர்ப்பு விடுதலைப் போராட்டத்தில் அனைத்து தேசிய இன மக்களையும் இணைத்து முற்போக்கான பாத்திரமாற்றியதாகவும், தரகு முதலாளிகள் அவர்களுடைய கட்சியான இந்திய தேசியக் காங்கிரஸ் மூலம் தலைமைப் பாத்திரம் ஆற்றி நாட்டை விடுதலை செய்து விட்டதாகவும் சி.பி.எம். படிக்கும் கதையை அப்படியே வாந்தி எடுக்கிறது த.தே.பொ.க.

இந்திய தேசியக் காங்கிரசும்,தரகு முதலாளிகளும் தேசிய விடுதலைப் போராட்டம் நடத்தி நாட்டை விடுதலை செய்தார்களோ இல்லையோ, தரகு முதலாளிகளுக்கு தேசிய முதலாளிகள் என்ற மகுடம் சூட்டியதன் மூலம் சி.பி.ஐ., சி.பி.எம். கட்சிகள் மிக எளிதாக கத்தியின்றி ரத்தமின்றி ஏகாதிபத்தியவாதிகளிடமிருந்து நாட்டை விடுதலை செய்து விட்டன. த.தே.பொ.க.வும் அந்த விடுதலையை வாங்கிக் கொண்டுவிட்டது.



இவ்வாறு சி.பி.எம். அடியொற்றி த.தே.பொ.க.வும் தரகு முதலாளிகளுக்கு தேசிய முதலாளிகள் என்ற மகுடத்தை சூட்டியபின் அவர்கள் ஏகாதிபத்திய எதிர்ப்பு பேச வேண்டிய அவசியம் எதுவும் இல்லை. அவ்வாறு ஏதேனும் பேசுவார் களானால், அது வெறும் நாடகமே என்பதைப் புரிந்து கொள்வது கடினமல்ல.

பார்ப்பனியம் சாதிய ஒடுக்குமுறை, தேசிய ஒடுக்குமுறை எனும் இரண்டு முகங்களையும், இரண்டாயிரம் ஆண்டு களுக்கு மேற்பட்ட ஒடுக்குமுறை வரலாற்றையும் கொண்டது. பார்ப்பனியத்தின் இரண்டாயிரமாண்டுகால தேசிய ஒடுக்குமுறை வரலாற்றின் ஒரு அங்கம் தான் பிரிட்டிஷ் இந்தியாவில் உருவான 'இந்திய தேசியம்'. ஆனால் சி.பி.எம்., சி.பி.ஐ. கட்சிகளின் 'இந்திய வரலாற்றில்' பார்ப்பனியத்தின் தேசிய ஒடுக்குமுறை முகத்தையும், அதன் இரண்டாயிரமாண்டு கால வரலாற்றையும் காண முடியாது. இந்திய தேசியம் எனும் ஏகாதிபத்தியவாத நோயால் பீடிக்கப்பட்ட ஒரு கட்சிக்கு இந்திய வரலாறு வேறுவகையாகத் தெரிய வாய்ப்பில்லை. அதனால் தான் பிரிட்டிஷ்கால இந்திய தேசியம் அதற்கு முற்போக்காகத் தெரிகிறது. இந்திய தேசியத்தில் இருக்கும் தேசிய இன ஒடுக்கு முறை எனும் ஏகாதிபத்தியவாதம் அதன் கண்களுக்குத் தெரியவில்லை.

இந்திய வரலாறு பற்றிய சி.பி.எம்.-ன் கோட்பாடுகளை அப்படியே ஏற்றுக்கொண்டதுதான் த.தே.பொ.க. அதனால் தான் இந்திய தேசியத்தின் முற்போக்கு பற்றி சி.பி.எம். கூறும் அதே செய்திகளை அப்படியே வாந்தி எடுக்கிறது. இந்தியாவில் தேசிய இன ஒடுக்குமுறை 'கட்டமைப்பு ஒடுக்குமுறை வகையிலானது' என்று சொன்னபோதும் சரி, 'இந்தி தேசிய இனம் ஒடுக்கும் தேசிய இனமாக இருக்கிறது, இந்தி தேசியமே இந்திய தேசியமாக முன்மொழியப்படுகிறது' என்று பின்னர் மாற்றிச் சொல்கின்றபோதும் சரி இந்திய தேசியம் என்பது தரகு முதலாளிகளுடன் சேர்ந்துகொண்டு பார்ப்பனியம் உருவாக்கிய

படிப்பகம்

www.padippkam.com



ஏகாதிபத்தியவாதம் என்பதை சி.பி.ஐ., சி.பி.எம். கட்சிகளைப் போலவே மறைக்கிறது.

இந்திய வரலாற்றில் தரகு முதலாளித்துவத்தையும் பார்ப்பனியத்தின் தேசிய ஒடுக்குமுறை முகத்தையும் அடையாளம் காட்டத் தவறுவது ஏகாதிபத்தியத்துக்கும், பார்ப்பனியத்துக்கும் செய்யும் சேவையே ஆகும். சி.பி.ஐ., சி.பி.எம். கட்சிகள் இந்தச் சேவையைச் செய்கின்றன. அவற்றோடு த.தே.பொ.கவும் அந்த சேவையில் சேர்ந்து கொண்டிருக்கிறது.

இந்திய ஒற்றுமையை இலக்காகக் கொண்டு தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை பிரச்சினையை அணுகுவது. இந்தியத் தரகு முதலாளிகளுக்கு தேசிய முதலாளிகள் என மகுடம் சூட்டி ஏகாதிபத்திய ஆதரவாளர்களாக நிற்பது. இந்திய தேசியம் என்பது தரகு-பார்ப்பனிய ஏகாதிபத்திய வாதம் என்பதை மறைத்து அதற்கு முற்போக்கு முகமூடி அணிவது. என்ற வகையிலெல்லாம் சி.பி.எம். புரட்டல்வாதக் கும்பலுடன் அப்படியே பின்னிப்பிணைந்து கிடக்கும் த.தே.பொ.க. இந்தியாவில் ஒடுக்கும் தேசியு இனம் இல்லை என்று கூறுவது சி.பி.எம். நிலைப்பாடு என பூச்சாண்டி காட்டுகிறது.

சி.பி.எம். நிலைப்பாடுகளுடன் அப்படியே பின்னிப் பிணைந்து கிடக்கும் த.தே.பொ.கவை வழி நடத்துவது சி.பி.எம்.-ன் ஏகாதிபத்தியவாதமும் சொந்த தரகு தேசியமும் தானேயன்றி மார்க்சியமல்ல. அது ஏற்றுக்கொண்டிருப்பதும் சி.பி.எம். முன்வைத்த இந்திய வரலாறுதான். அதாவது இந்திய தேசியம் என்னும் பெயரில் தரகு முதலாளிய-பார்ப்பனிய ஏகாதிபத்தியம் வரலாற்றில் வகிக்கும் பாத்திரத்தை மறுப்பது தான் சி.பி.எம்.-ன் இந்திய வரலாறு; அதுதான் த.தே.பொ.கவின் இந்திய வரலாறு. இவ்வாறு சி.பி.எம். புரட்டல்வாதிகளுடன் நெருங்கிப் பிணைந்து நின்று மார்க்சியத்திலிருந்தும், மண்ணின் வரலாற்றிலிருந்தும் விலகி நிற்கும் த.தே.பொ.க. மண்ணுக்கேற்ற மார்க்சியம் படைக்கப் போவதாக பிதற்றிக்கொண்டு அலைகிறது.



# 8

## த.தே.பொ.க. : சந்தர்ப்பவாத வித்தைகள் காட்டும் சர்க்கஸ் கூடாரம்

த.தே.பொ.க. பாட்டாளி வர்க்கத் தலைமையையும் பாட்டாளி வர்க்கத் தத்துவத்தையும் நிராகரித்துவிட்டது. அதற்கு பதிலாகக் கூட்டுத் தத்துவம், கூட்டுத் தலைமை எனும் வர்க்க சமரச தத்துவத்தையும், வர்க்க சமரச தலைமையையும் ஏற்றுக்கொண்டிருக்கிறது. எனவே அது இனியும் தன்னை ஒரு பொதுவுடைமைக் கட்சி என்று கூறிக்கொள்ள முடியாது. அதுமட்டும் அல்ல, அது தொடக்கத்திலிருந்தே தமிழ்த்தேசத் தன்னுரிமை, இந்திய ஒன்றியத்தில் சுயநிர்ணய உரிமையுள்ள தமிழ்த் தேசக் குடியரசு என்ற வர்க்கச் சமரச அரசியலை - தரகு தேசிய அரசியலைத்தான் முன்வைத்து வருகிறது.

வர்க்கப் போராட்ட அரசியல், வர்க்க சமரச அரசியல் என்பது வேறொன்றும் அல்ல. வர்க்கப் போராட்ட அரசியல் என்பது சமுதாயத்தைப் புரட்சிகரமாக மாற்றி அமைக்கும் அரசியல். உழைக்கும் மக்கள் கரங்களில் உற்பத்தி சாதனங்களையும், அதிகாரத்தையும் சேர்க்கும் அரசியல். வர்க்க சமரச அரசியல் என்பது இருக்கும் சமுதாய அமைப்பை அப்படியே பாதுகாப்பதற்கான அரசியல்; புரட்சிக்கு எதிரான அரசியல்.

த.தே.பொ.க. தன்னுரிமைப் புரட்சி, தமிழ்த் தேசப் புரட்சி என்றெல்லாம் கூறிவருவது வர்க்க சமரச - தரகு தேசிய அரசியலே. பொதுவுடைமை, தமிழ்த் தேசியம், புரட்சி ஆகியவற்றுக்கும், அக்கட்சிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை. எனினும் அது தன் பெயரிலேயே பொதுவுடைமை என்றும், தமிழ்த்தேசம் என்றும் பொறித்துக்கொண்டு தன்னுரிமைப் புரட்சி, தமிழ்த்தேசப் புரட்சி என்றெல்லாம் பிதற்றிக்கொண்டு வலம் வந்து கொண்டிருக்கிறது.

படிப்பகம்

www.padippkam.com



தமிழகத்தில் மார்க்சியத்தின் மீதும், தமிழ்த் தேசியத்தின் மீதும் நம்பிக்கை கொண்டுள்ள குட்டி முதலாளிய பிரிவினரை இலக்காகக் கொண்டு அவர்களெல்லாம் அதை ஒரு பொதுவுடைமைக் கட்சி என்றும்,தமிழ்த்தேசியக் கட்சி என்றும் நம்பவேண்டும் என்பதற்காக அது எண்ணற்ற சந்தர்ப்பவாத வித்தைகளை நடத்தி வருகிறது.

சி.பி.எம்.-லிருந்து எம்.சி.பி.ஐ.-க்கு மாறியபோது வரைவுக் கட்சித் திட்டம் ஒன்றை வெளியிட்டது. அந்தக் கட்சியிலிருந்து த.தே.பொ.க. வாக மாறியபின் பத்தாண்டுகளுக்கு மேலாகியும் அதற்கென்று ஒரு கட்சித் திட்டம் வரைவாகக் கூட இல்லை.

1992இல் நிறைவேற்றப்பட்ட கொள்கை அறிக்கை ஒன்றை அது வைத்திருக்கிறது. 1999இல் அதை மறுபதிப்பு செய்திருக்கிறது. அதில் சமுதாயத்தின் தன்மை பற்றியோ, புரட்சியின் கட்டம் பற்றியோ, வர்க்க அணிசேர்க்கை பற்றியோ, அமைக்கப்படப்போகும் அரசு பற்றியோ எதுவுமே இல்லை. பெரு முதலாளிகள் தலைமையிலான முதலாளிய-பார்ப்பனிய-இந்தி ஆதிக்க டில்லி அரசுக்கும் தமிழ்த்தேச மக்களுக்கும் இடையிலான முரண்பாடே முதன்மையான முரண்பாடு என்று கூறுகிறது.

தமிழ்த் தேசத்துக்குத் தன்னுரிமை வேண்டும் என்று மட்டும் கூறும் அந்த அறிக்கை எத்தகைய அரசு இருக்கவேண்டும் என்பது குறித்தோ, அது தனிநாட்டு அரசா, கூட்டரசில் அங்கமா, என்பது பற்றியோ எதுவும் கூறவில்லை.

ஆனால் இந்த அறிக்கையின் நிலைப்பாடுகளுக்கு முரண்பாடாக ஒடுக்கும் இந்தி தேசிய இனத்துக்கும், ஒடுக்கப்படும் தமிழ்த் தேசிய இனத்துக்கும் இடையிலான முரண்பாடுதான் முதன்மையான முரண்பாடு என்று அதன் தலைவர் பெ.ம. எழுதி வருகிறார். இந்த சந்தர்ப்பவாத மாற்றத்துக்கு 'பரிணாம' வளர்ச்சியில் வந்த 'துல்லியமான' முடிவு என்று அவர் பெயர் வைத்திருக்கிறார்.

தன்னுரிமை என்று மட்டும் கூறும் அதன் கொள்கை அறிக்கைக்கு மாறாக இந்திய ஒன்றியத்தில் தன்னுரிமை பெற்ற தமிழ்த்தேசக் குடியரசு என்று அது நடத்திய சென்னைத் தன்னுரிமை மாநாட்டுத் தீர்மானம் (1992) கூறுகிறது.



சென்னைத் தன்னுரிமை மாநாடு கூட்டரசுத் தீர்மானத்தை நிறைவேற்றிய பின்னர் அதற்கு மாறாக தன்னுரிமை என்றால் கூட்டரசு-தனிநாடு எனும் இரண்டு வாய்ப்புகளையும் உள்ளடக்கியதாகும் என்பதால் ஒரு கோரிக்கையை மட்டும் முன்வைக்கக் கூடாது; அவ்வாறு வைத்தால் மற்றொரு வாய்ப்பினை மறுத்ததாகிவிடும் என்று அதன் தலைவர்களில் ஒருவரான இரா.சோ. விளக்கம் அளிக்கிறார்.

கூட்டரசு, தனிநாடு ஆகிய இரண்டும் தன்னுரிமை நிலவும் இரண்டு வடிவங்கள் என்று இரா.சோ. விளக்கமளித்துக் கொண்டிருக்கையில் அதற்கு எதிராக கூட்டரசு என்பது குறைந்தபட்சக் கோரிக்கை, தனிநாடு என்பது அதிபட்சக் கோரிக்கை என 'விளக்கம்' அளிக்கிறார் பெ.ம.

தன்னுரிமை மாநாட்டில் கூட்டரசு பற்றிய தீர்மானத்தை நிறைவேற்றுகிறார். இந்தியாவில் தேசிய இனங்கள் என்ற தனது நூலிலும் இந்தியாவின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு கூட்டரசுதான் என்று கோரிக்கை வைக்கிறார். அதே நேரத்தில் த.தே.பொ.க.விற்கு கூட்டரசு கோரிக்கையில் நம்பிக்கை இல்லை என்றும், அது மக்களின் பிரமை என்றும் குறைந்தபட்சக் கோரிக்கை என்றும் பித்தலாட்டம் செய்கிறார் பெ.ம.

பாட்டாளி வர்க்கத் தலைமை வேண்டும் என்று எழுதுகிறார். பின்னர் பாட்டாளி வர்க்கத் தலைமை வேண்டியதில்லை என்று மறுத்து எழுதுகிறார். அதே நேரத்தில் பாட்டாளி வர்க்கத் தலைமையில்லாமலேயே மக்கள் ஜனநாயகக் கடமைகளை நிறைவேற்றப் போவதாக மாய்மாலம் காட்டுகிறார்.

மார்க்சியம் எல்லா ஒடுக்குமுறைகளிலிருந்தும் விடுபட வழிகாட்டும் தத்துவம் என ஒரு கட்டுரையில் எழுதுகிறார். மறு கட்டுரையிலேயே வர்ண-சாதி ஒடுக்குமுறையிலிருந்து விடுதலைபெற மார்க்சியம் வழிகாட்டவில்லை எனப் பிதற்றுகிறார்.

மார்க்சியம் சர்வதேச அளவில் முழுவளர்ச்சி பெற்ற தத்துவம் என்று ஒரு கட்டுரையில் எழுதுகிறார். மறு கட்டுரையில் அது சமுதாய வளர்ச்சியில் தேசிய இனங்களின் பாத்திரம் குறித்து சரியான வகையில் மதிப்பிடவில்லை என உளறுகிறார்.

படிப்பகம்

www.padippakam.com



தமிழ்த் தேசியக் குடியரசு என்கிறார்; ஆனால் அது எந்த வர்க்கத்தின் தலைமையிலான குடியரசு, கூட்டரசில் உள்ள குடியரசா தனிநாடாக உள்ள குடியரசா என்பது பற்றி எதுவும் கூறாமல் சந்தர்ப்பவாத சாமர்த்தியம் காட்டுகிறார்.

ஒடுக்கப்படும் தேசிய இனத்தைச் சேர்ந்த பாட்டாளி வர்க்கத்தின் தேசியக் கொள்கை குறித்த மார்க்சிய-லெனினிய வழிகாட்டும் கோட்பாடுகளைப் பிதற்றல் என்கிறார். ஆதாரமாக பொய்களை அள்ளிக் கொட்டுகிறார்; துணைக்கு மார்க்சையும் லெனினையும் தவறாகக் காட்டி பித்தலாட்டம் செய்கிறார். அதன் மூலம் தனது ஏகாதிபத்தியவாத, தரகு தேசியக் கொள்கையை மறைத்துக் கொள்கிறார்.

மூலதனத்தில் 33% பங்கு, வேலைவாய்ப்பில் 80% பங்கு என்ற கோரிக்கையை மக்களைத் திரட்டி சாதிக்கப் போவதாகவும், இதைப் படிப்படியாக 50%, 75% என அதிகரித்து அயலவர் மூலதனப் பங்கை குறைக்கப் போவதாகவும் சவடால் அடிக்கிறார். அதற்காக சில பொதுக்கூட்டங்களை மட்டும் நடத்திவிட்டு மக்களும் திரட்டப்படவில்லை, 33%-ம் நிறைவேறவில்லை என்பது தெரிந்திருந்தும் "வெளியாரை வெளியேற்றுவோம்" மாநாடு என ஒரு நாடகத்தை அரங்கேற்றுகிறார்.

தன்னுரிமை மாநாட்டில், இந்தியாவில் ஒடுக்கும் தேசிய இனம் இல்லை; கட்டமைப்பு ஒடுக்குமுறைதான் இருக்கிறது என்று தீர்மானம் போடுகிறார். அதே நேரத்தில் ஒடுக்கும் தேசிய இனம் இல்லை என்று சொன்னால் அது சி.பி.எம்.-ன் நிலைப்பாடு என்றும் தர்க்க ரீதியில் அது அனைத்து இந்தியப் புரட்சிக்கு இட்டுச்செல்லும் என்றும் பூச்சாண்டி காட்டுகிறார். அதுமட்டுமல்ல, சி.பி.எம். போலவே இந்தியத் தரகு முதலாளிகளை தேசிய முதலாளிகள் என்கிறார்; அவர்கள் தலைமையில் இந்தியாவில் 'விடுதலைப்' போராட்டம் வெற்றி பெற்றதாகக் கூறுகிறார்; இந்திய தேசியம் அனைத்து தேசிய இன மக்களையும் ஏகாதிபத்தியத்துக்கு எதிரான விடுதலைப் போராட்டத்தில் ஒன்றிணைக்கும் முற்போக்கான வரலாற்றுப்பாத்திரம் ஆற்றியதாகப் புகழ்கிறார்;



பார்ப்பனியத்தின் தேசிய ஒடுக்குமுறை முகத்தையும் அதன் இரண்டாயிரமாண்டுகால வரலாற்றையும் மறைக்கிறார்- இவ்வாறு எண்ணற்ற சி.பி.எம் நிலைப்பாடுகளை அப்படியே வாரிச் சுருட்டி தனதாக்கிக் கொண்டிருக்கிறார்.

இந்திய வரலாற்றில் தரகு முதலாளிய-பார்ப்பனிய ஏகாதிபத்தியத்தின் இடம் தெரியாமல் விழிக்கிறார்; மார்க்சியத்திற்கு பதிலாக சி.பி.எம்.-ன் ஏகாதிபத்திய வாதத்தையும் தரகு தேசியத்தையும் தனது வழிகாட்டும் தத்துவமாக கொண்டிருக்கிறார். இப்படி மண்ணையும் தெரியாமல், மார்க்சியத்தையும் தெரியாமல் மண்ணுக்கேற்ற மார்க்சியம் படைக்கப்போவதாக பிதற்றிக்கொண்டு அலைகிறார்.

மொத்தத்தில் சந்தர்ப்பவாத வித்தை காட்டும் சர்க்கஸ் கூடாரமாக இருக்கிறது த.தே.பொ.க. மார்க்சிய சொல்லாடல், தமிழ்த்தேசிய வாய்ச்சவடால், புரட்சிகர வாய்ப்பந்தல்-பொய், புரட்டு, பித்தலாட்டம் - தரகு தேசிய சேவை - இதுதான் த.தே.பொ.க. தரகு தேசியத்தின் சேவகர்கள் தங்களைப் புரட்சிக்காரர்களாகக் காட்ட முனைந்தால் எப்படி இருப்பார்கள் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டாக இருக்கிறது த.தே.பொ.க.

---

**த.தே.பொ.க.வின் கருத்துக்களுக்கு ஆதாரம்:** 1. இந்தியாவில் தேசிய இனங்கள் (பிப். 1990) - பெ. மணியரசன். 2. தமிழ்த்தேச தன்னுரிமைத் தீர்மானங்கள் (பிப். 1990). 3. த.தே.பொ.க. கொள்கை அறிக்கை (பிப்.1992) 4. தமிழகம்: தன்னுரிமையா? தனிநாடா? மாநில சுயாட்சியா? (ஆகஸ்ட் 1996) - இராசேந்திர சோழன். 5. தமிழ்த்தேசியம் புதிய கேள்விகள் (பிப். 1997) - பெ. மணியரசன். 6. தமிழ்த்தேசியம் இனி (செப். 2001) - பெ. மணியரசன். 7. தமிழர் கண்ணோட்டம் இதழ்கள்: ஜூன் 2003, ஆகஸ்ட் 2003, ஜூன் 2004, செப்டம்பர் 2004, ஜனவரி 2005, மே 2005.

படிப்பகம்

www.padippkam.com

# தநாமாலெக வின்

## வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| 1. | கட்சித் தீர்மானம் | ரூ. 15.00 |
| 2. | கட்சித் திட்டம் | ரூ. 20.00 |
| 3. | உடனடி வேலைத் திட்டம் | ரூ. 03.00 |
| 4. | பாட்டாளி வர்க்கத்தின் தேசியக் கொள்கை | ரூ. 30.00 |
| 5. | இந்தியாவில் தேசியப் பிரச்சினையும் சனநாயகப் புரட்சியும் | ரூ. 30.00 |
| 6. | இருபெரும் புரட்சிகளின் மாபெரும் படிப்பினைகள் | ரூ. 20.00 |
| 7. | திட்டம், மூலவுத்தி, செயலுத்தி என்றால் என்ன? | ரூ. 25.00 |
| 8. | முதலாளித்துவப் பாராளுமன்றமும் கம்யூனிஸ்டு புரட்சியாளர்களும் | ரூ. 30.00 |
| 9. | சமுதாயத்தின் அடிப்படை மற்றும் முதன்மை முரண்பாடுகள் | ரூ. 20.00 |
| 10. | தவறுகளுக்கு தத்துவார்த்த முலாம் | ரூ. 25.00 |
| 11. | திரிபுவாதத்திற்கு எதிராக | ரூ. 40.00 |
| 12. | பெரியார் தத்துவம் ஒரு மார்க்சிய விமர்சனம் | ரூ. 25.00 |
| 13. | மார்க்சியம் வெல்லும் | ரூ. 15.00 |

படிப்பகம்